பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 13 புதன்கிழமை (28.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 009

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## பிக்கப்-பாரவூர்தி கோர விபத்து

### பெண் வைத்தியரும் அவரது மாமன், மாமியும் பலி; கணவன் படுகாயம்





23ஆம் பக்கம் பார்க்க...

## சட்டமூலம் நிராகரிப்பு

(கொழும்பு)

விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்டமூலத்தை தென் மாகாண சபை மற்றும் சப்ரகமுவ மாகாண சபை ஆகியன நிராகரித்துள்ளன.

நேற்று தென்மாகாண சபையில் குறித்த சட்ட மூலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் 19 உறுப்பினர்கள் எதிராகவும் 14 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்

24ஆம் பக்கம் பார்க்க...

### வடக்கு-கிழக்கை இணைய விடோம்!

# சமஷ்டி தீர்வுக்கு இடமளியோம்!

### அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் சுயாதீனம் மற்றும் இறையாண்மையைப் பாதிக்கும் சமஷ்டி தீர்விற்கு செல்லவும், இரு மாகாணங்களை இணைத்து தனி இராஜ்ஜியமாக இன்னுமொரு நாடு உருவாகுவதற்கும் துளியளவும் இடமளிக்க போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான எஸ்.பி திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க...

### முன்னாள் பிரதமர் ரட்ணசிறி காலமானார்



23ஆம் பக்கம் பார்க்க...

### வருட இறுதி அமர்வு வடக்கு சபையில் இன்று


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான இறுதி அமர்வு இன்றைய தினம் நடைபெறவுள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் திகதி அன்று முதலாவது வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 30 ஆசனங்களை கைபற்றி ஆட்சி அமைத்தது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 7 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு

24ஆம் பக்கம் பார்க்க...

## சீனாவுக்கு காணி வழங்கும் திட்டத்தில் மேசைக்கு அடியில் பணம் கைமாற்றம்

### அரசுக்குள் அரசு என பீரிஸ் சாடல்



(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணியை சீன நிறுவனத்திற்கு வழங்கும் திட்டத்தில் பெருந்தொகை பணம் கைமாற்றப்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சில விசுவாசிகள் எடுத்த தீர்மானித்திற்கு அமையவே சீன நிறுவனத்துடனான ஒப்பந்தம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

23ஆம் பக்கம் பார்க்க...

### துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

(கொழும்பு)

கந்தளாய் பிரதேசத்தில் நேற்றிரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்ட குடும்பல் ஒன்று முச்சக்கர வண்டி ஒன்றில் தப்பிச் சென்ற போது, பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட

23ஆம் பக்கம் பார்க்க...

## சொத்து விபரம் சமர்ப்பிக்காத எம்.பிக்கள் குறித்து முறைப்பாடு

(கொழும்பு)


அரசியல் கட்சி நிர்வாகிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் தமது சொத்து பற்றிய விபரங்களை வழங்காதோருக்கு எதிராக இலஞ்சமோசடிவிசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யும தேர்

### கபே அமைப்பு வரவேற்பு

தல்கள் ஆணைக் குழுவின் தீர்மானத்தை வரவேற்கின்றோம் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் இயக்

24ஆம் பக்கம் பார்க்க...

### ரயிலில் வெடிகுண்டு! பயணிகள் அச்சம்



24ஆம் பக்கம் பார்க்க...


## அதி உச்ச அதிகாரப் பகிர்வு விடயத்தில் த.தே.கூட்டமைப்பை தோற்கடிப்போம்

### சம்பிக்க கருத்து

(கொழும்பு)

சர்வதேச அழுத்தங்களில் இருந்து மீளவும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து

23ஆம் பக்கம் பார்க்க...



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா வாழ்த்து

கலாநிதி
**நா.தனேந்திரன்**



கலாநிதி நா.தனேந்திரன் J.P அவர்களின் மணி விழா இன்று கொண்டாடப் படுவதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைவதுடன் அவரது சேவை மேலும் சிறப்பாக அமைய பாராட்டி வாழ்த்துகிறோம்.

நா.சிவசம்பு
பொருளாளர், தேசோதய அமைப்பு -கோப்பாய் பிரதேசம்

நாயன்மார்க்கட்டு

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 13
ஆதன இல: 60D
வீதி: அரசடி ஒழுங்கை
கிராமசேவையாளர் பிரிவு: J/141 சண்டிலிப்பாய் வடக்கு

வட்டாரம் 13, அரசடி ஒழுங்கை, ஆதன இல 60D இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "ஆவளைவளவு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 03 கொண்ட இவ்வாதனம் சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியைச் சேர்ந்த மாரிமுத்து இலங்கையன் கைம்பெண் இராஜேஸ்வரி, இலங்கையன் சதீஸ்வரன், இலங்கையன் காலிங்கராசா, இலங்கையன் கருணைராசா, இலங்கையன் கஜேந்திரன், இலங்கையன் குகேந்திரன், கண்ணையா கமலதாஸ் பெண் தனலட்சுமி, இலங்கையன் மகள் கீதா, கனகரத்தினம் கமலேஸ்வரன் பெண் றதினி, கணபதி ரவிச்சந்திரன் பெண் புஸ்பராணி ஆகிய இவர்களால் உதயகுமார் பெண் சரஸ்வதி அவர்களுக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. N. தம்பிமுத்தன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7185ம் இலக்க 28.12.2009ம் திகதிய நன்கொடை உறுதிமூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உபஅலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016/1/273ம் இலக்க 2016.11.06ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "ஆவளை வளவு" நிலப்பரப்பு 02 குளி 14.74 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்துமூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது உதயகுமார் பெண் சரஸ்வதி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய். (7183)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்: 13
ஆதன இல: 60B
வீதி: அரசடி ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு: J/141 சண்டிலிப்பாய்

வட்டாரம் 13, அரசடி ஒழுங்கை, ஆதன இல 60B இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை "ஆவளை வளவு" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 கொண்ட இவ்வாதனம் சண்டிலிப்பாய், வடக்கைச் சேர்ந்த விஜயரட்ணம் பெண் சந்திரா ஆகிய இவர்களால் மகேஸ்வரன் சிவாகரன் பெண் கேதீஸ்வரி அவர்களுக்கு சீதன உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. A.இராஜரட்ணம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7789ம் இலக்க 09.07.2011ம் திகதிய சீதன உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. S.பாலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 2016/1/272ம் இலக்க 2016.11.06ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "ஆவளை வளவு" நிலப்பரப்பு 01 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மகேஸ்வரன் சிவாகரன் பெண் கேதீஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (7184)

# மணிவிழா வாழ்த்து

கலாநிதி
**நா.தனேந்திரன்**



யாழ் மாவட்ட தேசோதய அமைப்பின் தலைவரும் யாழ்.மாவட்ட சமாதான நீதவான்கள் சங்கத்தின் தலைவருமான கலாநிதி நா.தனேந்திரன் J.P அவர்களின் மணிவிழா இன்று சிறப்பாக கொண்டாடுவதை இட்டு மணிவிழா நாயகனை மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இ.மயில்வாகனம் J.P
துணைத்தலைவர்,
யாழ்.மாவட்ட சமாதான நீதவான்கள் சங்கம்

நாயன்மார்க்கட்டு (இ-7030)

## 9 மாதத்தில் 283 இராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் விநியோகம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் 9 மாத காலப்பகுதிக்குள், இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தினால், 4 இலட்சத்து 23 ஆயிரத்து 66 புதிய கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக, புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 705 கடவுச்சீட்டுக்களும் மற்றைய நாடுகளுக்கான கடவுச்சீட்டுக்கள் 2 இலட்சத்து 69 ஆயிரத்து 647 கடவுச்சீட்டுக்களும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 283 புதிய இராஜதந்திர கடவுச்சீட்டுக்களும் முதல் 9 மாத காலப்பகுதிக்குள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் 54 ஆயிரத்து 751 கடவுச்சீட்டுக்களில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதேகாலப்பகுதிக்குள், 64 ஆயிரத்து 698 வெளிநாட்டவருக்கு புதிய இலங்கை விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## ஜனவரி 8க்கு முன் க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் 8ம் திகதிக்கு முன்னதாக உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஜே.என்.எம். புஸ்பகுமார இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தொழில்நுட்ப பாடப் பிரிவுகளுக்கான பரீட்சை பெறுபேறுகளைத் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பெறுபேறுகளை தயாரிக்கும் பணிகள் தற்போது பூர்த்தியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 3இலட்சத்து 15ஆயிரத்து 652 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதில் 30 ஆயிரம் பரீட்சார்த்திகள் புதிய தொழில்நுட்ப பிரிவுகளின் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். இந்நிலையில் தொழில்நுட்ப பிரிவில் செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்படுவதற்கு கால தாமதம் ஏற்பட்டதனால் பரீட்சை பெறுபேறுகளை உரிய நேரத்தில் வெளியிட முடியவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 28.11.2016 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் பொன்னுத்துரை ஈஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 26.12.2016 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. சபிண்டீகரண கிரியைகள் 28.12.2016 புதன்கிழமை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில், நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்*

கோண்டாவில் றோட்,
விவசாய வீதி,
கோப்பாய் தெற்கு.

தகவல் :
குடும்பத்தினர்
0771263693, 0766916348

(7187)

*உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்*

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

பதிமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

(C-7022)

## காணி விற்பனை

A9 வீதி நுணாவில் சந்திக்கு அருகே மட்டுவில் வீதியில் (200 M) துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 10 பரப்பு காணி பிரித்தும் கொடுக்கப்படும்.

**0778730129**

## தாதிப் பயிற்சி

உதவித் தாதிப் பயிற்சிக்கு பெண் பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

**0778730129**

# மணிவிழா வாழ்த்து

லயன் கலாநிதி
**நா.தனேந்திரன்**



இன்றைய தினம் (28.12.2016) தனது 60ஆவது அகவையில் மணிவிழா காணும் எமது யாழ்ப்பாணம் பிரதேச கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான லயன் கலாநிதி நா.தனேந்திரன் J.P அவர்களின் சமூகப்பணியை பாராட்டுவதுடன், அவர்களின் சமூகப் பணி மேலும் உயர்வடைய இறைவனைப் பிரார்த்தித்து நீடூழி வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
கிராம அபிவிருத்திச் சங்கங்கள், யாழ்ப்பாணம்.
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், யாழ்ப்பாணம்.
யாழ்ப்பாணம் பிரதேச கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசம்.

(7185)

# ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் விசேட அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபையின் தற்போது வரையான ஆட்சிக்காலத்தில் 24 ஆயிரத்து 41 முஸ்லிம்கள் வடக்கில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்து 145 முஸ்லிம்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற தகவலை வெளியிட்டு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திலும் காணி வழங்கலிலும் வடக்கு மாகாண சபை பாரபட்சம் காட்டியது என்ற குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது எனவும் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சமீப காலமாக முஸ்லிம் மக்களுக்கு வடக்கு மாகாண சபை காணிகள் பகிர்ந்தளிக்கும் விடயத்தில் பாரபட்சம் காட்டி வருவதாகவும் துரோகம் இருப்பதாகவும் குறிப்பிட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், மாகாண சபை உறுப்பினர்களும் குற்றம் சாட்டி வருகின்றனர்.

அந்த வகையில் தான் மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்களை மீள குடியேற்றுவதற்கும் புனர்வாழ்வு அளிப்பதற்குமெனா துரித செயலணி ஒன்று மீள்குடியேற்ற அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டது.

இந்த செயலணியின் இணைத்தலைவர்களாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம் சுவாமிநாதன், கைத்தொழில் வர்த்தக துறை அமைச்சர் றிசாத் பதியுதீன், மாகாண சபை உள்ளூராட்சி துறை அமைச்சர் பைசர் முஸ்தபா, விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண காணி அமைச்சர் என்ற வகையில் மேற்படி விடயம் தொடர்பில் மாகாண சபையின் வரவு செலவு திட்டத்தின் பொது அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்திருந்தேன். எனினும் உத்தியோக பூர்வமாக சில கருத்துக்களை கூற விரும்பியுள்ளேன்.

2015 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் 595 முஸ்லிம்களும் மன்னாரில் 17 ஆயிரத்து 626 முஸ்லிம்களும், வவுனியாவில் 992 முஸ்லிம்களும், முல்லைத்தீவில் 739 முஸ்லிம்களும், கிளிநொச்சியில் 4 ஆயிரத்து 88 முஸ்லிம்களுமாக மொத்தம் 24 ஆயிரத்து 40 முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதில் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 570 முஸ்லிம்களும், வவுனியாவில் ஆயிரத்து 231 முஸ்லிம்களும் மீள்குடியேற்றப்பட வேண்டும். மாகாண சபை உருவாகிய 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர்கள் ஆயிரத்து 105 பேருக்கும் முஸ்லிம்கள் 3 ஆயிரத்து 145 பேருக்கும் சிங்களவர்கள் 57 பேருக்குமாக 4 ஆயிரத்து 307 பேருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி வடக்கு மாகாண சபை முஸ்லிம் மக்களுக்கே முன்னுரிமை வழங்கி 73.03 வீதம் வழங்கியுள்ளது. மேலும் ஒரு தொகுதி காணி அனுமதிப்பத்திரங்கள் ஏற்கனவே காணி அமைச்சராகிய எனது அனுமதி பெறப்பட்டு உரிய பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திலும், காணி வழங்கலிலும் வடக்கு மாகாண சபை பாரபட்சம் காட்டியது என்ற குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## தாய்லாந்தில் இலங்கையர்களை கண்காணிக்க விசேட உத்தரவு

இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு தாய்லாந்து விமான நிலைய ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரித்துள்ள நிலையில், இவ்வாறு எச்சரிக்கை நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக "பாங்கொக் போஸ்ட்" செய்தி வெளியிட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுடன் சட்டவிரோத குடியேறிகள் மற்றும் குற்றவாளிகள் என பலரும் நாட்டுக்குள் பிரவேசிக்கக்கூடும் என அந்நாட்டின் குடிவரவுத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்நிலையில், தாய்லாந்து விமான நிலையங்களில் தீவிர சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக "பாங் கொக் போஸ்ட்" வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## உதவித் தொகை கிடைக்கவில்லை

### இராதாகிருஷ்ணனிடம் ஈழ அகதிகள் புகார்

இரண்டு மாதங்களாக தங்களுக்கு உதவித்தொகை வழங்கப்படவில்லை என இந்திய மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணனிடம், புழல் அகதிகள் முகாமில் உள்ள இலங்கை தமிழர்கள் புகார் செய்தனர்.

சென்னை, புழல் அடுத்த காவாங்கரையில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில், சேதமடைந்த வீடுகள் மற்றும் சென்னைக்கு குடிநீர் வழங்கும் புழலேரியின் நிலை ஆகியவற்றை பொன். இராதாகிருஷ்ணன் பார்வையிட்டார்.

குறித்த அகதிகள் முகாமில், 350 இற்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த, 1,300 இலங்கை தமிழர்கள் வசிக்கின்றனர். கடந்த, 12 ஆம் திகதி வீசிய, 'வர்தா' புயலால், அங்குள்ள பல வீடுகள் சேதமடைந்தன.

சேதமடைந்த வீடுகளை, அரசு இதுவரை சீரமைக்கவில்லை. எங்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை, கடந்த இரண்டு மாதங்களாக வழங்கப்படவில்லை என, அகதி முகாமில் தங்கியுள்ள தமிழர்கள், அமைச்சரிடம் புகார் செய்தனர்.

இதற்கு பொன்.இராதாகிருஷ்ணன் கூறுகையில், இலங்கை தமிழர் முகாமில் சேதமடைந்த வீடுகள் சீரமைப்பு மற்றும் நிலுவையில் உள்ள உதவித்தொகை உள்ளிட்ட கோரிக்கைகள், அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றார்.

புழல் அகதிகள் முகாமில் வசிப்போரில், ஆண்களுக்கு, மாதந்தோறும், 1,000 ரூபாய், பெண்களுக்கு, 750 ரூபாய், சிறுவர்களுக்கு, 400 ரூபாய் (இந்திய ரூபாய்) வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இந்திய மத்திய அரசின் செல்லாத ரூபாய் நோட்டு அறிவிப்பால், கடந்த இரண்டு மாதங்களாக, அவர்களுக்கு உதவித்தொகை கிடைக்கவில்லை என தமிழக ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன. (இ-10)

## தென்னை பயிர்ச் செய்கையாளர்களுக்கு 35 இலட்சம் ரூபா நிதி பகிர்ந்தளிப்பு



வடமாகாண தென்னை அபிவிருத்திச் சபையின் மானியத்திட்டங்களை ஊக்குவிப்பதற்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 180 பயனாளிகளுக்கு 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஊடுபயிர், டொலமைற், காஸ்றிற் (தேங்காய்மட்டை குழி) ஆகியவற்றுக்கான உரமானிய கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. அத்துடன் தென்னை வளர்ப்பு தொடர்பான பயிற்சிநெறியை பூர்த்தி செய்த 30 பயனாளிகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டதோடு தென்னம் நாற்று வழங்கும் திட்டத்தில் ஒருபகுதியினருக்கான தென்னம் நாற்றுக்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் ரி.வைகுந்தன் உட்பட தென்னை அபிவிருத்தி சபை உத்தியோகத்தர்கள், பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: டொ. சோபிகா)

## அரசை தேர்தலை நோக்கி நகர்த்துவது விசர் நாயை குளிப்பாட்டுவது போன்றது

### கம்மன்பில கூறுகிறார்

விசர் பிடித்த நாயை குளிப்பாட்டுவதற்கு எடுத்துச் செல்வதை விடவும் இந்த அரசாங்கத்தை தேர்தலை நோக்கி நகர்த்துவது சிரமமானது என கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் கூட்டு எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தி விட்டு தேர்தலை நடத்த பல்வேறு முயற்சியை முன்னெடுக்கின்றது.



இது ஒரு போதும் சாத்தியமாகாது. இந்த அரசாங்கத்தின் முயற்சியை டெங்கு நோயை ஒழிப்பதற்கு செலுத்தியிருந்தால் அதிலாவது ஓரளவு வெற்றி கொண்டிருக்கலாம் எனவும் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## 11 பவுண் நகை, ரூ.7000 பணம் திருட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் பட்டப்பகலில் உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த நகை, பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10:30 மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் இச்சம்பவத்தில் 11 பவுண் நகை மற்றும் 7000 ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

வீட்டில் உள்ளோர் ஆலயத்திற்கு சென்ற வேளை அதனைப் பயன்படுத்தி யன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்த திருடர்கள் இத்திருட்டை மேற்கொண்டுள்ளனர். இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (இ-6)

# அதிபர் நியமனம் தொடர்பில் மிகுந்த வேதனை அடைகின்றோம்

## தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

வடக்கு மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலை தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் விடுத்த அந்த அறிக்கை இங்கு அப்படியே தரப்படுகிறது.

தேசிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற தமிழர் ஆசிரியர்கள், அதிபர்களுக்காக உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தமிழ் தேசியத்தோடு ஒன்றித்துப் பயணிப்பதனை எவரும் மறுப்பதற்கு இல்லை.

இந்நிலையில் தமிழர் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெருமளவான அங்கத்துவ உறுப்பினர்களைக் கொண்டுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி வளர்ச்சியின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றது.

அதிபர் சேவைத்தரம் - III கிடைக்கப் பெற்றவர்களின் நியமனம் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் நடவடிக்கை தொடர்பில் மிகுந்த வேதனையுடன் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடுகின்றோம்.

வடக்கு மாகாணம் கல்வியில் கொடிகட்டிப்பறந்த காலத்தை நாம் மறந்துவிட முடியாது. பொருளாதார வசதிகள் அற்ற நிலையில் பல்வேறு அடக்கு முறைகளுக்கும், யுத்தகாலங்களுக்கும் மத்தியில் வட மாகாணத்தின் கல்வி நிலை உயர்வாகவே இருந்தது. ஆனால் இன்று மாகாணங்களுள் கடைசி இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. அதிலும் வடக்கு மாகாண சபை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வசம் வந்த பின்னர் இத்தகையநிலை மிக மோசமாக உள்ளமை மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும்.

தற்போது அதிபர் சேவைத்தரம் - III பெற்றவர்களின் நியமனம் தொடர்பாக வடக்கு மாகாண சபையின் நடவடிக்கை மிகுந்த வேதனை தருவதாக உள்ளது.

இது தொடர்பாக நாம் அனைவருக்கும் தெளிவுபடுத்தும் வகையில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடுகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் 1064 மாகாணப் பாடசாலைகளும், 22 தேசிய பாடசாலைகளும், 06 தனியார் பாடசாலைகளுமாக மொத்தம் 1092 பாடசாலைகள் உள்ளன.

இவற்றில் 1AB பாடசாலைகள் 103, 1C பாடசாலைகள் 117, வகை II பாடசாலைகள் 319, வகை III பாடசாலைகள் 460 உள்ளன.

தற்போது 388 ஆசிரியர்களுக்கு தரம்-III அதிபர் நியமனம் கிடைக்கப் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 424 அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் வெற்றிடங்கள் உள்ளன.

அதிபர் வெற்றிடம் 220 உள்ளது. பிரதிஅதிபர், உதவிஅதிபர் வெற்றிடம் 133 உள்ளது. பதில் அதிபர்கள் 71 பேர் உள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 12கல்வி வலயங்களிலும் யாழ்ப்பாணம், வடமராட்சி ஆகிய கல்வி வலயங்களில் அதிகமான ஆசிரியர்கள் அதிபர் பரீட்சையில் சித்தி பெற்றனர்.

அதேவேளை மேற்குறித்த கல்வி வலயங்களில் வெற்றிடப் பாடசாலைகள் குறைவாகவே உள்ளன.

வெற்றிடப் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகமாக வன்னிப் பிரதேசத்திலேயே உள்ளன.

சித்திபெற்ற அதிபர்களில் கணிசமானோர் க.பொ.த உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பிப்பவர்கள். பட்டதாரி ஆசிரியர்கள். இவர்களில் 15Oற்கும் மேற்பட்டவர்கள் பாடசாலை அதிபர் கடமையைவிட தமது பாடத்துறையைக் கற்பிக்கும் நோக்கில் பிரதி அதிபர், உதவி அதிபர் பதவிகளை எழுத்து மூலமாக கோரியுள்ளனர். இவர்களில் 70பேர் வலிகாமம் கல்வி வலயம் சார்ந்தவர்கள்.

16அதிபர்கள் கடமைநிறைவேற்றும் பணியில் இருந்து அதிபர் தரம் III கிடைக்கப் பெற்றுள்ளனர். இவர்களுள் இன்னும் சிலருக்கு கல்வி நிர்வாக சேவை நியமனம் கிடைத்துள்ளது.

இத்தகைய புள்ளிவிபரங்களுக்கு அப்பால் தற்போது நியமனம் கிடைக்கப்பெற்ற அதிபர்கள் III ஆம் வகைப் பாடசாலைகளுக்கே அதிபர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்கள். மேலதிகமாக 1AB பாடசாலைகளுக்கும், 1C பாடசாலைகளுக்கும், வகை II பாடசாலைகளுக்கும் பிரதி அதிபர்களாகவும், உதவி அதிபர்களாகவும் நியமிக்க தகைமை உடையவர்கள்.

இத்தகைய நிலை எவற்றையும் புரிந்து கொள்ளாமல் கல்வி அமைச்சரினதும், கல்வி அமைச்சு செயலாளரினதும், மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும், 12 வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களினதும் கருத்துக்களைப் புறந்தள்ளி வடக்கு மாகாணசபை தவறான முடிவுகளை எடுப்பது மிகவும் வேதனைதரும் விடயமாக உள்ளது.

வடக்கு மாகாண சபையில் ஏகமனதாக ஒரு முடிவை எடுப்பதும் அதற்கு எதிராக முதலமைச்சர் தொழிற்படுவதும், மாகாண சபை உறுப்பினர்கள் சிலர் தமது சொந்த நலனுக்காக ஒரே கட்சியில் இருந்துகொண்டு கலந்து ஆலோசிக்காமல் மாகாண சபையில் எதிரும், புதிருமாக விவாதம் நடாத்துவதும் வேடிக்கையாக உள்ளது.

வடபுலத்துக் கல்வி சட்டகத்தைச் சரியாக விளங்கிக்கொள்ளாமல் இவ்வாறு நடந்து கொள்வது கல்விப்புலம் சார்ந்தவர்களின் மனங்களை புண்படுத்துவதாகவும், ஆத்திரமூட்டுவதாகவும் உள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 12 வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கடமை நிறைவேற்றும் பணியில் உள்ளவர்கள். பெருமளவான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ளவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் பலர் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ள அதிபர்கள். உதவிக்கல்விப் பணிப்பாளர்களில் 90 வீதமானவர்கள் கடமைநிறைவேற்றும் பணியில் உள்ள ஆசிரியர்கள்.

இதுஇவ்வாறு இருக்க புதிய அதிபர்களையும், கடமைநிறைவேற்றும் அதிபர்களையும் பகைவர்களாக்கி போராட்டங்களை நடாத்தி கல்வியில் பாதிப்பை உண்டு பண்ண தீயசக்திகள் சில வடக்கு மாகாணத்திற்குள் ஊடுருவியுள்ளன. இதனை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சி.ஸ்ரீதரன் அவர்கள் கடமைநிறைவேற்றும் அதிபர்களின் ஒன்றுகூடலில் வெளிப்படையாக பேசியுள்ளார்.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திற்குள்ளும் ஊடுருவி நாசகார வேலைகளைப் புரிகின்றனர். அதிபர் நியமனம் தொடர்பாக குழப்பநிலை கிழக்கு மாகாணத்தில் இன்னும் நீடித்தவண்ணம் உள்ளது. மற்றைய ஏழு மாகாணங்களிலும் இல்லாத நெருக்கடியை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு ஏற்படுத்தி கல்வியை சீரழிக்க முனைவதனை நாம் அனுமதிக்க முடியாது.

இதனைப் புரிந்துகொள்ளாத மாகாண சபையின் உறுப்பினர்கள் சிலர் நாசகார வேலைபுரிபவர்களுக்கு பக்கபலமாக நின்று போராட்டங்களைத் தூண்டிவிடுவது ஆரோக்கியமானது அல்ல. இதைவிட வடக்கு மாகாணத்தின் உண்மைத்தன்மையைப் புரிந்துகொண்டு சபையின் ஏகோபித்த முடிவுகளைச் சபைக்கு ஊடாக வெளியிட வேண்டும். அதுமட்டுமன்றி கல்வி தொடர்பான விடயங்களில் மிகுந்த கரிசனையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொள்ளாத மாகாண சபையின் உறுப்பினர்கள் எதிர் வரும் காலங்களில் எம்மால் புறக்கணிக்கப் படுவார்கள் என்பதனை சங்கம் வெளிப் படையாக தெரிவிக்கின்றது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவஞானம் தில்லையம்பலம்



யாழ்.கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் பிரப்பன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானம் தில்லையம்பலம் நேற்று (27.12.2016) செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பவளம் தம்பதியரின் புதல்வியும் தில்லையம்பலத்தின் (கொட்டடி) மனைவியும் ஆறுமுகம், பொன்னு, ரத்தினம், மகேஸ்வரி, அகிலாண்டேஸ்வரி, பரமேஸ்வரி, கணபதிப்பிள்ளை, நவநீதம், விஜயரட்ணம் ஆகியோரின் சகோதரியும் நாகரட்ணம், கனகேஸ்வரி, கனகலிங்கம், கதிரேசபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் சிவப்பிரியா, சிவதர்ஷினியின் தாயாரும் தயாபரன், அகிலனின் மாமியாரும் தனுஜா, யதுஷனா, பிரணவ், துருவின் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரப்பன்குளம் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(7189)

தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## புலேந்திரலிங்கம் சின்னத்தங்கம்



எமது கல்லூரியின் ஆசிரியர் குகானந்தன் அவர்களின் அன்புத் தாயார் அமரர் புலேந்திரலிங்கம் சின்னத்தங்கம் இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-7034)

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

# வேலாயுதன் நகுலன்

ஆசிரியர் (யா/இளவாலை ஹென்றி அரசர் பாடசாலை)



வேலாயுதன் நகுலன் அவர்கள் 26/12/2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதன் தர்மவதி தம்பதியரின் அன்பு மகனும், சிவராசா - செல்வராணி தம்பதியினரின் மருமகனும் தர்சினியின் அன்புக் கணவரும், கர்சயாவின் பாசமிகு தந்தையும், அகிலன் (ஆசிரியர்), ஜெயந்தன், மங்களிக்கா, ரம்பா (பிரான்ஸ்), ராஜாராம், அபிரா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரனும், ஐங்கரன் (கனடா), அஜன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29/12/2016 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நிச்சாமம், சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிச்சாமம்,
சங்கானை.

(C-7033)

தகவல்:
குடும்பத்தினர்



தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு வடமராட்சிக் கிழக்கு பிரதேசத்தில் மரக் கன்றுகள் நாட்டப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டிவைத்தார். இந் நிகழ்வு கொடுக்கிளாய் மக்களினால் புதிதாக அமைக்கப்பட்ட அபாய வெளியேற்றப் பாதை அமைந்துள்ள ஆற்றங்கரை பகுதியில் இடம் பெற்றது. இதன் போது 5000 கண்டல் தாவரங்கள் நாட்டப்பட்டன. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பெருந் தொகையான கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படங்கள் பொற்பதி, கரணவாய் செய்தியாளர்கள்)

# தொல்பொருள் சின்னங்களை பார்வையிடலும் தேடல் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டம் நடத்தும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்களைப் பார்வையிடலும் தேடல் சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

தொல்பொருட் சின்னங்களைப் பார்வையிடும் நிகழ்வு தொல்லியல் அருங்காட்சியகத்திலும் சஞ்சிகை வெளியீடு கைலாசபதி கலையரங்கிலும் இடம்பெறும்.

தொல்லியல் ஆய்வு வட்டத் தலைவர் பொ. வருண்ராஜ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் , கௌரவ விருந்தினர்களாக கலைப்பீடத்தில் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் செ.கிருஷ்ண ராஜா , தொல்லியல் இணைப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)





பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில்வருடாந்தபொலிஸ் அணிவகுப்பு மரியாதையும் வாகன பரிசோதனையும் நேற்று நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டதன் பின்னர் பொலிஸ்நிலையத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதையடுத்து மரக்கன்றுகளை நாட்டி வைத்தார். பின்னர் வறுமைக்கோட்டிற்குட்பட்ட மக்களுக்குவாழ்வாதார உதவிகளை வழங்கிவைத்தார்.

அதன்பின்னர் பொலிஸ் நிலையத்தை சுற்றிப் பார்த்தார். இவ்வைபவத்தில் அவருடன் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் மாசிங்க, வடமாகாண தமிழ் உத்தியோகத்தர்களுக்கான நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கணேசானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-மகாலிங்கம்)

# பொது மண்டபம் திறப்பு

(கரணவாய்)

கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத் திட்டத்தில் வெற்றிலைக்கேணியில் அமைக்கப்பட்ட பொது மண்டபத்தினை அரச அதிபர் நா. வேதநாயகன் திறந்து வைத்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் மருதங்கேணி பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.



இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் அப் பகுதி கிராம அலுவலர், பிர தேச செயலக உத்தியோகத்தர்கள் அப் பகுதி மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)

### சகல ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

2017 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் தொடர்பான கருத்தரங்கு நாளை மறுதினம் 30.12.2016 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் சகல ஆசிரியர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி வி.சண்முகரட்ணம் அறிவித்துள்ளார். (இ-3)


# துயர் பகிர்வு



அமரர்.தம்பையா சங்கரப்பிள்ளை

எமது இல்லப் பணியாளரான புஸ்பராசாவின் தந்தையாகிய அமரர்.தம்பையா சங்கரப்பிள்ளை அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு துயரினை பகிர்ந்து கொள்கின்றோம்.

உத்தியோகத்தர்
நலன்புரிச்சங்கம்,
அரச முதியோர் இல்லம், கைதடி.


# இராசி பலன்

28.12.2016
(மார்கழி 13, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 11.37 மணிவரை
கேட்டை முன்னிரவு 10.17 மணிவரை
சுபநேரம் 4.58-6.28 மணிவரை
இராகுகாலம் 12.23-1.58 மணிவரை
கர்ப்போட்ட ஆரம்பம்
அமாவாசை விரதம்

வலவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் | கிரகநிலை சந்திராஷ்டமம் கார்த்திகை, ரோகிணி பகல் 10 மணிக்கு குரு-சந் | | |
| சுக் | | | ராகு |
| சூரி | சனி சந் புத | | குரு |

**மீனம்:** செய் தொழில் மேன்மையுண்டு, மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும், வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** விழிப்பாட்டால் விருத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், உடல்நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், யோகம் சுகமுண்டு.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தனவரவு திருப்திதரும் வகையில் அமையும்.

**கடகம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பயணத்தால் பலனுண்டு, உடல்நலன் சீராகும்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாடு காரிய வெற்றி தரும், சுப விரயங்கள் ஏற்படும் நாள்.

**சிம்மம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சேமிப்பை விலக்குவது நல்லது, வெளியூர் பயணமொன்று உருவாகலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**விருச்சிகம்:** திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** தூரத்து உறவினர்களால் அனுகூலமுண்டு, வாகன பழுதுச் செலவுகள் குறையும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும்.

# வாழ்வாதார உதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களில் இறால் பிடிப்பு தொழிலில் அனுபவமுடைய 22 குடும்பங்களுக்கு "கனு" என்ற துடுப்பினால் இயக்கப்படும் மிதவைகள் மற்றும் வள்ளங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காரைநகர் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

மகளிர் விவகார அமைச்சு மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் சிபாரிசில் காரைநகர் பிரதேச சபை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பயனாளிகள் தெரிவு இடம்பெற்று அதில் 22 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அவர்களுக்கான வள்ளங்கள் மற்றும் மிதவைகளை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் வழங்கி வைத்தார்.

இதில் மிதவைகள் ஒவ்வொன்றும் தலா ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபாவும், வள்ளங்கள் ஒவ்வொன்றும் தலா 74 ஆயிரத்து 25 ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# சி.வை.தாமோதரம்பிள்ளையின் 117 ஆம் ஆண்டு சிரார்த்த தினம்

சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த சபையும் மத்திய சனசமூக நிலையமும் முன்பள்ளி சமூகமும் இணைந்து நடத்தும் இராவ் பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளையின் 117 ஆம் ஆண்டு சிரார்த்த தின விழாவும் கண்ணகை முன்பள்ளிக்கான நிரந்தர குடில் திறப்பு விழாவும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏழாலை அருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான வடகரை வீதியில் இடம்பெறும்.

தலைவர் இ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலிகாமம் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கிருபானந்தன், வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் தி.சுதர்சன், கௌரவ விருந்தினர்களாக வலி.தெற்கு பிரதேச சபை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொ.சந்திரவேல், வலி.தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தி.பிரகாஷ், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ம.தயாபரன், ஏழாலை வடக்கு ஜே/205 கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி ச.தினேஷ், உடுவில் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ஜே.வடிவாம்பிகை, ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய அதிபர் திருமதி தே.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-78)

# ஒளிவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை கிறிஸ்தவ ஊழியர் சங்கம் நடத்தும் ஒளிவிழா நாளை 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் யாழ்.சாலை வளாகத்தில் இடம்பெறும்.

அ.அருட்பிரகாஸ்(ஜே.பி.) தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா கலந்து கொள்வார். (இ-3)






தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கடந்த 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலை காவுகொண்ட உயிர்களின் நினைவு தினமும் ஏனைய இயற்கை அனர்த்தங்களால் உயிரிழந்த அனைத்து ஆத்மாக்களுக்குமான அஞ்சலி நிகழ்வும் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அனர்த்த முகாமைத்துவ திணைக்கள, யாழ்.மாவட்ட செயலக உதவிப்பணிப்பாளர் எஸ்.ரவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, தேசியக்கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி இயற்கை அனர்த்தத்தால் உயிரிழந்த உறவுகளை நினைவுகூர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி நடைபெற்றதுடன் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. இதில் மதகுருக்கள், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், மாவட்டச்செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# முதியோர் சங்கத்தின் ஆண்டு நிறைவு விழா

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொன்னையா இராசரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு தென் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் க.சிவலிங்கம், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக சமூகசேவைகள் உத்தியோகத்தர் திருமதி முகுந்தன் விஜயகுமாரி, கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் எஸ்.வசந்தகுமார், கோப்பாய் வடக்கு வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் திருமதி சுகந்தன் சுதர்சினி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் ஏ.ஆனந்தராசா, ஓய்வு நிலை அதிபர் கே.ஆனந்தராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மத்தியஸ்த சபை கூட்டம் நடைபெறாது

யாழ்ப்பாணம் ஜே/246 மத்தியஸ்த சபையின் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த மத்தியஸ்த சபைக் கூட்டம் புதுவருடப் பிறப்பாக இருப்பதனால் அன்றைய தினம் இடம்பெறாது என தலைவர் ஆர்.திலகரட்ணம் அறிவித்துள்ளார். (இ-3)

# பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றன.

எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 6 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும்படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 431(2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

யாழ். நீதிமன்ற வழக்கு இலக்கம் MC/2492/F/16 (B/404/S/16), வழக்கு இலக்கம் MC/2492/F/16 சான்றுப்பொருள் இல. PR/35/16 சான்றுப் பொருள் விபரம் 28.S 1085 இலக்க இசுசு வர்க்க லொறி வாகனம்

2) யாழ். நீதிமன்ற வழக்கு இலக்கம் MC/2784/S/16 வழக்கு இலக்கம் MC/2784/S/16 சான்றுப் பொருள் இலக்கம் PR/73/16 சான்றுப் பொருள் விபரம் பதிவு செய்யப்படாத உழவு இயந்திரப் பெட்டி 01

3) யாழ். நீதிமன்ற வழக்கு இலக்கம் MC/2522/S/16 வழக்கு இலக்கம் MC/2522/S/16 சான்றுப் பொருள் இலக்கம் PR/89/16 சான்றுப் பொருள் விபரம் இலக்கம் அற்ற உழவு இயந்திரப்பெட்டி 01 மறு தவணை 22.05.2017 என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

# மீன்வளர்ப்பு, நீரியல்வள தொழில்நுட்ப கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் மீன்வளர்ப்பு மற்றும் நீரியல்வள தொழில்நுட்பக் கற்கை நெறியானது 2017 ஜனவரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

க.பொ.த. சாதாரண தரம் அல்லது உயர்தரம் சித்தி அடைந்தவர்கள் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்பவர்கள் தேசிய தொழில் தராதரப் பத்திர சான்றிதழ் மட்டம் 3-5 (NVQ 3-டிப்ளோமாவிற்கு நிகரான சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இக் கற்கை நெறியினை கற்க விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை 2 ஆம் குறுக்குத்தெரு குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 021 738 8188, 071 834 9073 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# போதனாசிரியர்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் சமூகக் கற்கை நிலையமானது கோப்பாய் மகா வித்தியாலயத்தில் உருவாக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் இருந்து NVQ 3 தர தேசிய தொழில் சார் தகைமைச் சான்றிதழினை வழங்குவதற்கு ஏற்ற வகையில் போதனாசிரியர்களை தெரிவு செய்வதற்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அந்த வகையில் தையல் பயிற்சி நெறிக்கு NVQ 4,5,6 தகைமையுடையோர் விண்ணப்பிக்க முடியும்.

கணனிப் பயிற்சி நெறிக்காக NVQ 5,6 அல்லது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் Computer Diploma சான்றிதழ் பெற்றோரும் விண்ணப்பிக்க முடியும். இவர்கள் செய்முறைப் பரீட்சை சான்றிதழ் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பிக்க விரும்புவோர் யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பிரிவின் முறைசாராக் கல்விப் பிரிவிலிருந்து விண்ணப்பங்களைப் பெற்று 10.01.2017 இற்கு முன்னர் கடித உறையின் இடது பக்கத்தில் போதனாசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் என குறிப்பிட்டு வலயக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்வி, வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

# காந்தீயம் பத்திரிகையின் டிசெ.மாத இதழ் வெளியீடு

இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகையின் டிசெம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இவ் இதழில் சங்கத்தின் முதலாவது தலைவர் ஹன்டி பேரின்பநாயகம் பற்றிய கட்டுரை, நெல்சன் மண்டேலா பற்றிய கட்டுரை, எழில் பூக்கள் நூல் விமர்சனம், மணி மன்றன் எழுதிய "எழுச்சியின் திருவுருவம் காந்தி" என்ற தலைப்பிலான கவிதை என்பவற்றுடன் காந்தி, வினோபாஜி போன்ற பெரியார்களின் பொன்மொழிகளும் பிறமொழிகளும் அடங்கியுள்ளன.

இவ் இதழின் இலவசப் பிரதியொன்றை பெற விரும்புபவர்கள் சுய முகவரி எழுதப்பட்ட ரூபாய் 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபால் உறையில் ஆசிரியர் காந்தீயம், இலக்கம் 77/4 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ள முடியும் என்று காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (இ-7)

# மணிவிழா நிகழ்வு

சமூகசேவையாளரும் கலாநிதி நா.தனேந்திரனின் (ஜே.பி.) மணி விழா நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, சிறி நதியா கட்டடத் தொகுதியில் உள்ள என்.எஸ்.ஆர்.திருமண மண்டபத்தில் இடம்பெறும்.

மணிவிழாக்குழுத் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியருமான க.தேவராஜா தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறும். (இ-3)

# திருக்கோவையார் முற்றோதல்

வட்டுக்கோட்டை தெக்கணம்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணி தொடக்கம் திருக்கோவையார் முற்றோதல் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

# யாழ்.சைவ பரிபாலன சபையின் திருவாசக முற்றோதல் நிகழ்வு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் திருவாசக முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும்.

இந் நிகழ்வில் பங்குபற்றி மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் வை.இரகுநாதமுதலியார் அறிவித்துள்ளார். (இ-3)

# ஜெயா இருந்திருந்தால் வருமான வரித்துறையினர் தலைமைச் செயலகத்திற்குள் நுழைந்திருக்க முடியுமா?

## ராமமோகனராவ் கேள்வி; உயிருக்கு ஆபத்து எனவும் தெரிவிப்பு

(டில்லி)

ஜெயலலிதா இருந்திருந்தால் வருமான வரித்துறையினர் தலைமை செயலக அலுவலகத்திற்குள் நுழைய முடியுமா? என பணி இடைநீக்கம் செய்யப்பட்ட தமிழ் தலைமை செயலாளர் ராமமோகன ராவ் பத்திரிகையாளர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.



கடந்த வாரம் தமிழக முன்னாள் தலைமை செயலாளர் ராமமோகன ராவ் வீடு, அலுவலகம் மற்றும் அவரது மகன் விவேக், உறவினர்கள் வீடுகளில் வருமான வரித்துறையினர் நடத்திய அதிரடி சோதனையில் பல இலட்சம் மதிப்பிலான பணம், தங்கம் மற்றும் சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து ராமமோகன ராவை தமிழக அரசு பணி இடைநீக்கம் செய்தது.

இந்நிலையில், தனது வீட்டில் வைத்து பத்திரிகையாளர்களை சந்தித்த ராமமோகன ராவ், வருமான வரித்துறை சோதனை மூலம் தலைமைச் செயலகத்தை காப்பாற்ற அரசு தவறிவிட்டது. இந்த சோதனை அரசியல் சாசனத்தின் மீதான தாக்குதல்.

வருமான வரித்துறையினர் சோதனையின் போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டேன். தலைமைச் செயலாளரை வீட்டுக்காவலில் வைக்கப்பட்டது அரசியல் சட்டவிரோதம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் என்க்கு ஆதரவு தெரிவித்த மம்தா பானர்ஜி மற்றும் ராகுல் காந்திக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயலலிதா இருந்தால் தலைமைச் செயலகத்தில் வருமான வரித்துறையினர் நுழைய முடியுமா. துணை இராணுவப்படையினருக்கு எனது அறையில் என்ன வேலை. துப்பாக்கி முனையில் நுழைந்து எனது வீட்டினை சோதனை நடத்தினர். எனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்று அவர் தெரிவித்தார். (இ-10)


### தேவை

லான்சர் 90 ஜப்பான் மோட்டார்சைக்கிள் ஒன்று தேவை.

தொடர்புகளுக்கு: 077 618 3885

(7155)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### விவசாயபீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி
### விரிவுரைகள் ஆரம்பம்

விவசாய பீடத்திற்கு 2015/2016 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வு எதிர்வரும் 04.01.2017 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அறிவியல்நகர், கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கான விடுதிகள் 03.01.2017 மாலை (பி.ப. 3.00) வழங்கப்படும்.

பதிவாளர்
27.12.2016 (சி-7027)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்

1. கலைமாணி (பொது)
2. கலைமாணி (சிறப்பு)
3. வணிகமாணி
4. நடனமாணி
5. வியாபார முகாமைத்துவமாணி

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் 29.01.2017 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கை நெறிகளில் 15.02.2015 இற்கு பின்பும் 11.09.2016 திகதிக்கு முன்பும் சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்பட விருப்பதால் தகுதி உடையவர்கள் 13.01.2017 இற்கு முன்னதாக வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் 28.12.2016 (புதன்கிழமை) தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை பெற விரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
26.12.2016 (சி-7025)

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
### மானிப்பாய் கிராம உப அலுவலகம்
### ஆனைக்கோட்டை
### ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம் :- 07
ஆதன இல : - 16/05
வீதி :- புளியங்கண்டு பிள்ளையார் வீதி,
கிராம சேவையாளர் பிரிவு : - J/133 ஆனைக்கோட்டை

வட்டாரம் 07, புளியங்கண்டுபிள்ளையார் வீதி, ஆதன இல. 16/05இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "கம்பஞ்சாட்டியும் நாவிதன் வளவும் வாரி வண்ணன் வளவும் மேற்குப்புற வளவும்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 02 1/2 கொண்ட இவ்வாதனம் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த சண்முகதாஸ் தர்மதாஸ் பெண் தங்கராணி ஆகிய இவர்களால் அம்மன் வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த செல்லையா நவசீலசிங்கம் பெண் நிலானி அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.சி.வீரகத்திப்பிள்ளை அவர்கள் முகதாவில் நிறைவேறிய 13904 ஆம் இலக்க 15.09.2013 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. S.சிவராஜா அவர்களால் வரையப்பட்ட 451 ஆம் இலக்க 30.10.2016 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "கம்பஞ்சாட்டியும் நாவிதன் வளவும் வாரி வண்ணன் வளவும் மேற்குப்புற வளவும்" நிலப்பரப்பு 01 குளி 17.21 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லையா நவசீலசிங்கம் பெண் நிலானி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (7179)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள் -2013

1. இசைமாணி / நடனமாணி – முதலாம் வருடத் தேர்வு
2. இசைமாணி / நடனமாணி – இரண்டாம் வருடத் தேர்வு
3. இசைமாணி / நடனமாணி – மூன்றாம் வருடத் தேர்வு
4. இசைமாணி / நடனமாணி – நான்காம் வருடத் தேர்வு

மேற்படி பரீட்சைகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கி கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்திய மைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினை பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300 /= க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 70/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை www.jfn.ac.lk/codi எனும் இணையத்தள முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 20.01.2017 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

குறிப்பு: இசைமாணி மற்றும் நடனமாணி கற்கை நெறி தொடர்பாக விரைவில் புதிய பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதால், ஏற்கனவே பழைய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களே வழங்கப்பட இருப்பதால் மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து விரைவில் தங்கள் கற்கை நெறிகளை பூர்த்திசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களை பெறவிரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
27.12.2016 (சி-7026)


### கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, அரசதொழில்<br>தொ.இ: B/6683 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 28 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3248 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 4.5 செவ். 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L, சொந்த தொழில்<br>தொ.இ: B/6684 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 54 சூரி செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.A<br>தொ.இ: G/3263 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 20 செவ். 4 இல்.<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: BSc Eng/ பொறியியலாளர், சிங்கப்பூர்<br>தொ.இ: B/6685 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 49<br>உயரம்: 5'2'<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: G/3289 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 20 செவ் 8 இல்<br>உயரம்: 159 cm<br>தகைமை/தொழில்: QS /தனியார் தொழில்<br>தொ.இ: B/6686 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 18.75<br>உயரம்: 5'3'<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3291 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

# திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைத்துள்ள எமது உறவுகளுக்கு கருணை காட்டுங்கள்

## கண்ணீருடன் உறவினர்கள் கோரிக்கை

தமிழ்நாடு திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருந்து வரும் எமது உறவுகளிடம் இரக்கம் காட்டுங்கள் என அவர்களது பெற்றோர்கள், உறவினர்கள் கிளிநொச்சியில் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் பத்துப் பேர் மற்றும் மண்டபம் முகாமில் இருக்கும் ஒரு பெண் ஆகியோரின் உறவுகளே கிளிநொச்சியில் பத்திரிகையாளர்களை நேற்றுக்காலை சந்தித்து மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளனர்.

தனது மூத்த மகனை இறுதி யுத்தத்தில் பலிகொடுத்துள்ள நிலையில் தற்போது இருக்கின்ற ஒரு மகன் தமிழ்நாடு சென்ற நிலையில் அங்கு வைத்து கைது செய்யப்பட்டு தற்போது திருச்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அங்கு அவர்களை அடித்து துன்புறுத்துகின்றனர். சட்ட ரீதியாக விசா எடுத்து சுற்றுலாவுக்குச் சென்ற மகனை சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வந்துள்ளதாகக் கூறி அதற்கு ஒப்பம் இடுமாறு தொடர்ந்தும் துன்புறுத்தி வருகின்றனர்.

யுத்தகாலத்தில் மிக மோசமாக மன உளைச்சலுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம்கொடுத்த எங்களுக்கு பிள்ளைகள் உண்ணாவிரதம் இருந்து வருவதான செய்தி மேலும் எங்களை மனதளவில் பாதித்துள்ளது. எனவே அவர்கள் சிலவேளை ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் அதனை மன்னித்து தயவு செய்து விடுதலை செய்யுங்கள் என திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைத்திருக்கும் ஈழத்தமிழர்கள் பத்துப் பேரில் ஒருவரின் தந்தையான உமாகாந்தன் தெரிவித்துள்ளார்.

நான் இரண்டு குழந்தைகளுடன் மிகவும் நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வருகின்றேன். எனது கணவர் கைது செய்யப்படும் போது இரண்டாவது குழந்தை ஏழு மாதம் வயிற்றில். தற்போது எனது குழந்தைக்கு அப்பாவின் முகம் தெரியாது. மூத்த மகளுக்கு நான்கு வயது. நாளாந்தம் அப்பா எங்கே என்று கேட்டுக்கொண்டே இருக்கின்றாள். தயவு செய்து எனது பிள்ளைகளுக்காக எனது கணவரை விடுதலை செய்யுங்கள் என அழுதழுது கேட்டுக்கொண்டார்.

இதேவேளை தனது அப்பாவை தன்னுடன் சேர்த்து வைக்குமாறு நான்கு வயது பெண் குழந்தை அழுதவாறு கேட்டுக்கொண்டமை மனதை நெகிழ வைத்தது. (2-312)

# தனது உடைமையில் கசிப்பை வைத்திருந்த நபர் கைதானார்

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் கிராமத்தில் விற்பனை செய்யும் நோக்குடன் 750 மில்லி லீற்றர் கசிப்பினை தனது உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

**புளியம்பொக்கணையில் சம்பவம்**

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். எம். என். டீ. சதுரங்கவின் உத்தரவுக்கு அமைய விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த தருமபுரம் பொலிஸாரின் சோதனையின் போதே கசிப்புடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருளுடன் சந்தேக நபர் விசாரணையின் பின்னர், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# யானைகளை கட்டுப்படுத்த மின்சாரவேலி அமையுங்கள்

முல்லைத்தீவு துணுக்காயின் ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மின்சார வேலிகள் அமைத்துத் தருமாறு இக்கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஐயன்கன்குளத்தில் 210 குடும்பங்களும் பழையமுறிகண்டியில் 40 குடும்பங்களும் புத்துவெட்டுவானில் 80 குடும்பங்களும் யானைகளின் தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளதோடு, விவசாயச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக புத்துவெட்டுவானிலிருந்து ஐயன்கன்குளம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் வைத்தியசாலைக்குச் செல்லும் மக்களும் அடிக்கடி யானைத் தாக்குதலுக்கு உள்ளாவதுடன், துரத்தப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. யானை வெடிகளுக்குக் கூட அஞ்சாத யானைகளை எதிர்கொள்வதற்கு, மின்சார வேலியை அமைத்துத் தருமாறு, இக்கிராமங்களின் மக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2)

# கால்நடை வளர்ப்பாளர்கள் 40 பேருக்கு கால்நடைகளை பராமரிக்க கொட்டகைகள்

## அமைப்பதற்கான பொருட்கள் வழங்கி வைப்பு



கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் "தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க திட்டத்தின்" கீழ் கால்நடை வளர்ப்பாளர்களின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட முசலி மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் 40 பேருக்கு கால்நடைகளை அடைத்து பராமரிக்கும் கொட்டகைகள் அமைப்பதற்கான பொருட்கள் நேற்று செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் உயிலங்குளம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் தலைமையில் முதலில் முசலி வேப்பங்குளம் கால்நடை வைத்திய அலுவலகத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 கால்நடை வளர்ப்பாளர்களுக்கு கால்நடைகளை அடைத்து பராமரிக்கும் கொட்டகைகள் அமைப்பதற்கான பொருட்கள் வழங்கப்பட்டன.

இதன்போது மாடு வளர்க்கும் பயனாளிகள் 10 பேரும், ஆடு வளர்க்கும் பயனாளிகள் 10 பேரும் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கொட்டகைகள் அமைப்பதற்கான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த பயனாளிகள் 20 பேருக்கும் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த பொருட்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மற்றும் உயிலங்குளம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், முசலி கால்நடை வைத்திய அதிகாரிகள் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 20 கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு கொட்டகைகள் அமைப்பதற்கான பொருட்கள் வழங்கும் நிகழ்வு மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வண்ணாங்குளம் கால்நடை வைத்திய அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளில் ஆடு வளர்க்கும் 10 பயனாளிகளுக்கும் மாடு வளர்க்கும் 10 பயனாளிகளுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான கொட்டகைகள் அமைப்பதற்கான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த பொருட்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மற்றும் அதிகாரிகள் இணைந்து வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-9)

# கலைவிழாவும் நூல் வெளியீடும்

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் 6 ஆவது ஆண்டு கலைவிழாவும் "பூந்துணர்" ஆறாவது நூல் வெளியீடும் பூநகர்பெட்டகம் 1 ஆவது நூலும் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முழங்காவில் கிருஸ்ணர் கோயில் மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பல்வேறு கலைநிகழ்வுகள் நடைபெறும் இவ்விழாவில் பூநகரி பிரதேசத்தில் கலைத்தொண்டாற்றிய நால்வர் "கலைநகரி" விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

அந்த வகையில், கா.கார்த்திகேசு, ஜோசப் பிரான்சிஸ், மா.சுப்பிரமணியம், கு.சுமுகலிங்கம் (சைவப்புலவர்), இளங்கலைஞர் விருது தகௌரீஸ்வரனுக்குவழங்கப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினம், முழங்காவில் ம.வி.அதிபர் ப.ஆந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (2-8.4)




# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு வடக்குமாகாணசபை உறுப்பினர் வைத்தியநாதன் தவநாதனின் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து 10 இலட்சம் ரூபா பெறுமதியில் கற்றல் உபகரணங்கள், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மடிக்கணனிகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி வலயக் கல்வி பணிப்பாளர் க.முருகவேல் தலைமையில் நேற்று முன்தினம் கிளிநொச்சி வலயக்கல்வி பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் அரசியல் கைதிகளின் பிள்ளைகள் உள்ளிட்ட 30 மாணவர்களுக்கு புத்தகப்பை, பாதணி, அப்பியாசக்கொப்பிகள் உட்பட பொதிகள், 19 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள், பல்கலைக்கழக மாணவர்கள் 7 பேருக்கு மடிக்கணனிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் உதவி கல்வி பணிப்பாளர்கள், வலயக்கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-9)

# மேய்ச்சல் தரவைகளில் விடப்படும் கால்நடைகள் களவாடப்படுகின்றன

## நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் மேய்ச்சலுக்காக கட்டப்படும் கால்நடைகள் இனந்தெரியாதோரால் கடத்தப்படும் சம்பவங்கள் இடம் பெறுவதாக பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இது தொடர்பில் பொலிஸ நிலையங்களிலும் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில்தெரிய வருவதாவது.

காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கால்நடை வளர்ப்போர் தமது ஆடு, மாடுகளை அந்தப் பகுதிகளிலுள்ள வெற்றுக் காணிகளிலும் மேய்ச்சல் தரைகளிலும் கட்டி மாலை வேளைகளில் வீடுகளுக்கு கொண்டு செல்கின்றனர்.

இந்நிலையில் பலரது மாடுகள் திடீரென காணாமல் போகும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த 22 ஆம் திகதி மேய்ச்சல் தரவையில் விடப்பட்ட இரு காளை மாடுகள் காணாமல்போனசம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் காளை மாட்டின் உரிமையாளர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் குறித்த பகுதியில் அடிக்கடி இடம்பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (2-84)

# கயட்டை பகுதியில் நடைபெற்ற ஆழிப்பேரலை நினைவு நிகழ்வு





கடந்த 2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தத்தால் காவுகொள்ளப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட உறவுகளில் ஒரு தொகுதியினர் புதைக்கப்பட்ட முள்ளியவளை நெடுங்கேணி வீதியிலுள்ள கயட்டை பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு சிறப்புற இடம்பெற்றது. நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன தினம் பிற்பகல் 4.30 மணிக்கு கயட்டை பிரதேசத்தில் மத வழிபாடுகளுடன் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், அனர்த்த முகாமைத்துவ பிரிவு என்பன இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன, வடக்கு மாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் பிரதேச செயலாளர்கள், அதிகாரிகள், உறவுகள் மற்றும் பலர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (2-281)

# முல்லையில் 2 ஆயிரத்து 259 மாற்றுத் திறனாளிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது இரண்டாயிரத்து 259 மாற்றுத்திறனாளிகள் காணப்படுவதாக மாவட்ட செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் 567 பேரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 707 பேரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 311 பேரும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 282 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 317 பேரும் வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 75 பேரும் என மொத்தம் இரண்டாயிரத்து 259 மாற்றுத் திறனாளிகள் காணப்படுகின்றனர்.

இதில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உடல் அவயவங்களை இழந்தவர்கள் அதிகமாக காணப்படுகின்றனர். அத்துடன் குடும்ப தலைவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்வாறு காணப்படுவதனால் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் வருமானமின்றியும் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. (2-15)

# வாகன விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேர் படுகாயம்

## வவுனியா மூன்றுமுறிப்பு சந்தியில் சம்பவம்





வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வவுனியா மூன்றுமுறிப்பு சந்திப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்துபேர் படுகாயமடைந்த நிலையில் பொதுமக்களினால் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

நோயாளர்களை வைத்தியசாலைக்கு ஏற்றி பயணித்த ஆட்டோ உழவு இயந்திரமும் நேருக்குநேர் மோதிக் கொண்டமையினால் இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆட்டோவில் பயணித்தவர்களே விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்தின் போது ஆட்டோ பலத்த சேதமடைந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸ் நிலையப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15)




# வரவு-செலவுத்திட்ட நிதியொதுக்கீட்டின் மூலம் 38.532 மில். கிடைத்துள்ளது

## முல்லை. மாவட்ட திட்டமிடல் கிளை தகவல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியொதுக்கீடுகளின் கீழ் 38.532 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளதாக மாவட்ட திட்டமிடல் கிளையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டின் பல்வேறு திட்டங்களுக்காக அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கலாக 10 பேரினது நிதியொதுக்கீடுகளாக பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக 38.532 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த நிதியொதுக்கீடுகளின் கீழ் சுமார் 277 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட திட்டமிடல் கிளையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5)

# பூமித்தாயில் மனிதர்கள் ஒட்டுண்ணியாக வாழ்வதன் விளைவே இயற்கை பேரழிவுகள்

## இயற்கை பேரிடர் தணிப்பு தின நிகழ்வில் வடக்கு சுற்றாடல் அமைச்சர்



பூமி எமது தாய். தமிழ் மொழியில் மாத்திரம் அல்ல. உலகில் பேசப்படுகின்ற அனைத்து மொழிகளிலுமே பூமியை அன்னை என்றும் பூமாதேவி என்றும் பூமிக்கு உயிர் கொடுத்துத்தான் அழைத்து வருகிறார்கள். ஆனால், பூமியின் குழந்தைகள் போல நாங்கள் நடந்து கொள்வதில்லை. பூமியில் நாங்கள் ஒட்டுண்ணிகளாகவே வாழ்ந்து வருகிறோம். அதன் விளைவுதான் இயற்கைப் பேரழிவுகள் என்று வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண இயற்கைப் பேரிடர் தணிப்புத்தின நிகழ்ச்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில், செம்மலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இயற்கைப் பேரிடர்களை முற்றாகத் தவிர்க்க இயலாமற் போனாலும், அவற்றின் பாதிப்புகளைத் தணிவிக்க இயலும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு அமர்வாக இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பூமிக்கு உயிர் உண்டு. பாடங்களை நாங்கள் இரசாயனவியல், பௌதீகவியல், புவியியல், உயிரியல் என்று தனித்தனியாகப் படித்து வருவதாலேயே பூமியின் முழுப் பரிமாணங்களையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம். எங்களது உடலின் வெப்ப நிலையை, குருதியில் உள்ள குளுக்கோசின் செறிவை உடல் மாறாமற் பேணி வருகிறது. அதேபோன்று, பூமியும் தன் வெப்பநிலையை, வளியில் உள்ள வாயுக்கலவையின் விகிதாசாரங்களைச் சீராக வைத்திருக்கிறது. மனிதனின் உடலில் ஒரு சீர்நிலை காணப்படுவதைப் போன்றே, பூமியிலும் அது பேணப்பட்டு வருகிறது. இது குழப்பப்படுகின்றபோதே அழிவுகள் ஏற்படுகின்றன.

மனிதர்களின் இப்போதைய சனத்தொகை 740 கோடி. இவ்வளவு பேரும் பூமித்தாயின் வளங்களை அளவுக்கு அதிகமாகச் சூறையாடி ஒட்டுண்ணி வாழ்க்கையையே நடத்தி வருகிறோம். பூமியின் நலனில் நாங்கள் அக்கறை கொள்ளாததால், தன் நலனில் தானே அக்கறை கொள்ள வேண்டிய அவசியம் பூமிக்கு ஏற்பட்டுள்ளது. இதனால்தான் புயல், மழை, வெள்ளம், கடும் வரட்சி, கடற்கோள் என்று இயற்கைப் பேரிடர்களை ஏற்படுத்திப் பூமி எங்களை அழித்து வருகிறது.

பூமிக்கும் எங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த யுத்தத்தில் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டிய இறுதிக் கட்டத்திலேயே நிற்கிறோம். எங்களது உணவுக்குழாயில் இகோலி என்ற பக்ரீறியாக்கள் கோடிக்கணக்கில் குடியிருக்கின்றன. நாங்களும் இகோலி பக்ரீறியாக்களும் ஒன்றுக்கொன்று நன்மை பயப்பனவாக வாழ்வதால் ஒன்றையொன்று அழிப்பதற்கு முற்படுவதில்லை. அதேபோன்று, நாங்களும் பூமித்தாய்க்கு நன்மைகள் செய்து, அவளிடம் இருந்தும் நன்மைகள் பெற்று ஒன்றிய வாழிகளாக வாழ்வதால் மட்டுமே இயற்கையின் சீற்றங்களைத் தணிவிக்க இயலும். மாறாக, தொடர்ந்தும் ஒட்டுண்ணிகளாகவே வாழ்ந்து பூமியின் வளங்களை உறிஞ்சு முற்படுவோமானால் நாங்களும் அழிந்து பூமியும் அழிவதை தவிர்க்க இயலாமற் போய்விடும் என்றும் தெரிவித்துள்ளார். (2)

# 'தகவல் அறியும் உரிமைச்சட்டம்' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு



"தகவல் அறியும் உரிமைச் சட்டம்" தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று டிரான்ஸ்பெரன்சி இன்ரநசனல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நிறுவனத்தின் இணைப்பாளர் ரவீந்திர டி சில்வாவின் தலைமையில் அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலிருந்து கிராமமட்ட குழுக்களைச் சேர்ந்த 150 வரையிலானோர் இதில் கலந்து கொண்டனர். தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினைப் பயன்படுத்தி மக்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்கள், நலன்கள் பற்றி இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவி பிரதேச செயலாளர் சாரதா அஞ்சலிநாதன், டிரான்ஸ்பரன்ஸி இன்ரநசனல் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் எஸ்.நிசாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# சமஷ்டி ஆட்சி முறையை அரசு அறிமுகம் செய்யாது

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசாங்கம் ஒருபோதும் சமஷ்டி ஆட்சி முறையை அறிமுகம் செய்யாது எனவும் புதிய அரசியலமைப்பின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்படவோ ஒற்றையாட்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தப்படவோமாட்டாது என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



மாத்தறை கோட்டேகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்கியே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமே தவிர எவரும் நினைத்தபடி இதில் மாற்றங்களை செய்ய முடியாது.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பின் மூலம் நாடு பல பகுதிகளாக பிரிக்கப்படும் என ஒரு சிலர் புரளியை ஏற்படுத்தி வருகின்றனர். இதில் எந்த உண்மையும் இல்லை.

புதிய அரசியலமைப்பின்படி நாடு ஒன்பது துண்டுகளாக பிரிக்கப்படமாட்டாது. வடக்கும் கிழக்கும் மீண்டும் இணைக்கப்படமாட்டாது.

அரசாங்கம் ஒருபோதும் "சமஷ்டி" ஆட்சி முறையை அறிமுகம் செய்யாது. நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு குந்தகம் ஏற்படுத்தப்படமாட்டாது. இதை மக்கள் நம்ப வேண்டும்" என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-10)

# இலங்கை மாணவர்கள் இந்தியாவில் கல்விகற்பதற்கான புலமைப்பரிசில்கள்

(கொழும்பு)

2017ஆம் ஆண்டில் இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 100 இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

மருத்துவம் தவிர்ந்த பொறியியல், விஞ்ஞானம், பொருளாதாரம், வர்த்தகம், மானுடவியல், கலை போன்ற கற்கைநெறியில் பட்டப்படிப்பை தொடர்வதற்கு இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

மௌலானா, ஆஸாத் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 50 இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் பட்டப்பின் படிப்பை தொடர்வதற்கான புலமைப் பரிசிலையும் பெற்றுக்கொள்ள முடியும். விவசாயம், விஞ்ஞானம், கலை, பொறியியல், பொருளியியல் ஆகிய துறைகளில் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ராஜீவ்காந்தி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 25 மாணவர்களுக்கு இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம், பொறியியல் ஆகிய துறைகளில் பட்டப்படிப்பை தொடரலாம்.

ஐந்து இலங்கையர்களுக்கு மருத்துவம் தவிர்ந்த துறைகளில் கலாநிதி கற்கைக்கான புலமைப்பரிசில்களை பெற்றுக்கொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

உயர்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.mohe.gov.lk என்ற இணையத்தள முகவரியில் விண்ணப்பப்படிவங்களை தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். (இ-10)

# சர்வதேச விமான பயணங்கள்

## மாலை 4.30 முதல் காலை 8.30 வரை



(கொழும்பு)

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான நிலைய ஓடுபாதையின் திருத்தப் பணிகள், ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரை 28 நாட்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தக் காலப்பகுதியில் விமான நிலையத்தின் ஊடான சர்வதேச விமான பயணங்கள், மாலை 4.30 இல் இருந்து அடுத்த நாள் காலை 8.30 வரை இடம்பெறவுள்ளது. உள்நாட்டு விமான பயணங்கள் இரத்மலானை விமான நிலையத்தின் ஊடாக இடம்பெறும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நிர்மாணப் பணிகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள மொத்த தொகை 7 பில்லியன் ரூபாயாகும். நெதர்லாந்து நாட்டின் உசாத்துணை நிறுவனம் ஒன்றின் மேற்பார்வையில் சீன நாட்டு நிறுவனங்கள் இரண்டு இந்த நிர்மாண பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலையத்தின் நிர்வாக நேரக் கட்டுப்பாடு காரணமாக பயணிகளுக்கு ஏற்படும் சிரமத்தை குறைக்கும் வகையில் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி முதல் விமான நிலையத்தின் வெளிச் செல்லல் பிரிவின் வருகையாளர்கள் முழுமையாக மட்டுப்படுத்தப்படும் என்றும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை, “கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பிரதான ஓடுபாதை. கடந்த 1986ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. இது 3,350 மீற்றர் நீளத்தையும் 45 சதுரமீற்றர் பரப்பையும் கொண்டது. இது 20 ஆண்டுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், சர்வதேச சிவில் விமான போக்குவரத்து அமைப்பின் அறிக்கையின் பிரகாரம், இந்த ஓடுபாதைக்கான புனரமைப்பு காலம், 1996 ஆம் ஆண்டுடன் நிறைவடைகின்றது. இது தொடர்பில் குறித்த அமைப்பினால் அடிக்கொரு தடவை ஞாபகப்படுத்தப்பட்டு வந்தது. இந்தப் பிரதான ஓடுபாதை, 2017 ஆம் ஆண்டுக்கு பின்னர் பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியிருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. மேலும், “28 எயார்லைன்ஸ்களைச் சேர்ந்த சுமார் 177 விமானங்கள், அன்றாடம் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றன. நாளாந்தம் 25,000 பயணிகள் இந்த விமான நிலையத்தில் பயன்படுத்துவதுடன், 300 தொன் பொருட்கள் பரிமாறப்படுகின்றன. இதனால், ஓடுபாதையில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளதோடு விமானங்களுக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

# விலையை அதிகரித்தால் நாங்கள் விற்கமாட்டோம்

## அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனையாளர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

அதிர்ஷ்ட இலாபச்சீட்டின் விலை அதிகரிக்கப்படுமாயின், 2017ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து அதிர்ஷ்ட இலாபச் சீட்டை விற்பனை செய்யமாட்டோம் என்று, அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விற்பனைப் பிரதிநிதிகள் எச்சரித்துள்ளனர். “அதிர்ஷ்ட இலாபச் சீட்டு ஒன்றின் விலையை 30 ரூபாய் வரையிலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானமானது, நாட்டிலிருந்து அதிர்ஷ்ட இலாபச்சீட்டுச் சந்தையை இல்லாதொழிக்கும் செயற்பாடாகும். ஆகவே, அந்தத் தீர்மானத்தை இரத்துச் செய்யுங்கள்” என அப்பிரதிநிதிகள் சங்கம் எடுத்துரைத்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் குருநாகல் மாவட்ட, அதிர்ஷ்ட இலாபச்சீட்டு விற்பனைப் பிரதிநிதிகள், நலன்புரிச் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ‘அதிர்ஷ்ட இலாபச்சீட்டொன்றின் விலையை 10 ரூபாயினால் அதிகரிப்பதற்கு எடுத்திருக்கும் தீர்மானத்தைக் கைவிடுமாறு, அரசாங்கத்திடம் நாம் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம். அப்படியில்லாமல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டினை வேறு நபர்களைக் கொண்டு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்” என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. “தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியவற்றுக்கு அதிகாரிகளை நியமித்து, ஒருவருடம் கடப்பதற்கு முன்னரே, அந்தத் துறையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எவ்வித அனுபவங்களும் இல்லாதவர்களை நியமிக்கின்றபோது, இவ்வாறான நிலைமையே ஏற்படும்” என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. “அனுபவமில்லாத அதிகாரிகளினால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தினால், அதிர்ஷ்ட இலாபச்சீட்டு துறைச் சந்தையே இல்லாமற் போவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# குற்றவாளிகளை காக்க முற்படுகிறதா அரசு?
## ஜே.வி.பிக்கு சந்தேகம்




மத்திய வங்கியின் பிணை முறி மோசடிகள் தொடர்பிலான குற்றவாளிகளை பாதுகாக்க அரசாங்கம் முயற்சிப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது என, மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பிணை முறி மோசடிகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட கோப் குழுவின் தலைவருமான சுனில் ஹந்துன்நெத்தி இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் 28 ஆம் திகதி கோப் குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக கூறிய அவர், இந்த அறிக்கை குறித்த விவாதம் இது வரை பாராளுமன்றத்தில் நடத்தப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தற்போது அந்த அறிக்கை பாராளுமன்றத்தின ஆவணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் குறித்து மக்கள் பிரதிநிதிகளிடம் பகிரங்க உரையாடலை நடத்தும் வாய்ப்பை ஏற்படுத்தி, அந்த அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவது குறித்து விரைவில் பொறிமுறை ஒன்றை வெளியிடுவதே பாராளுமன்றத்தின் பொறுப்பு எனவும் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)




# வரட்சி விவகாரம்
## ஜனவரி 3இல் கூடுகிறது ஜனாதிபதி செயலணி

(கொழும்பு)

வரட்சிக்கு முகங்கொடுக்கும் திட்டத்தைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணி, 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதியன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடவுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

வருடத்தின் முதல் காலாண்டுக்குள் ஏற்படப்போகும் வரட்சிக்கு முகங்கொடுப்பதற்கு, ஜனாதிபதி செயலணி ஒன்றை நிறுவுவதற்கு அரசாங்கம், கடந்த 20ஆம் திகதியன்று நடவடிக்கை எடுத்திருந்தது.

அதன்பிரகாரம், திட்டத்தைத் தயாரிப்பதற்கான அமைச்சரவை உப-குழுக்கள் இரண்டும் நிறுவப்பட்டுள்ளன.

அவ்விரு குழுக்களும், தங்களுடைய யோசனைகளையும் பரிந்துரைகளையும், எதிர்வரும் 3ஆம் திகதியன்று கையளிக்கவுள்ளன என்று, அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில விக்கிரமசிங்க ஆகியோரின் கண்காணிப்பின் கீழேயே, இந்த விசேட செயலணி வழி நடத்தப்படவுள்ளது.

கடுமையான வரட்சி ஏற்படுமாயின், நீர் மின் விநியோகத்தை தொடர்ச்சியாக விநியோகம் செய்தல், சுத்தமான குடிநீரை விநியோகம் செய்தல், விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரை விநியோகம் செய்தல் தொடர்பில், நடவடிக்கை எடுக்குமாறு உரிய அமைச்சுகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெள்ளை முள்ளங்கி

Botanical Name - Raphanus sativus
Family - Cruciterae
Eng - Raddish
Sinh - Rabu

முள்ளங்கிச் செடிக்குத் தண்டு கிளைகள் எதுவும் இல்லை. கிழங்கின் நுனிப் பகுதியில் இருந்தே சுமார் 5 முதல் 10 இலைகள் நேரிடையாகவே தோன்றி வளருகின்றன. இலைக் காம்பு பெருத்து சிறிது தட்டையாக இருக்கும். சுமார் 3-6 செ.மீ அகலமும், 8-15 செ. மீ நீளமுமுள்ள இலையின்ஓரம் பெரிய பிளவுகளைப் பெற்றிருக்கும்.

இலையின் அடிப்புறத்தில் மிக மெல்லிய கட்டையான, தடிப்பான சுனைகள் பருவைப் போல காணப்படுகின்றன. மேல்பாகம் சுனைகளற்று வழவழப்பாகவே இருக்கும். ஆனால் சிறு கொழுந்துஇலைகளில்சுனைகளதிகமுண்டு. இலை மஞ்சள் கலந்த பசுமை நிறமுடையது. பூ மஞ்சள் நிறமுடையது. சுமார் 6.7 செ.மீ நீளமும் 1 செ.மீ பருமனுமுள்ள காய் ஒரே பருமனாக இல்லாமல் இடைஇடையே சிறுத்து 2.3 பாகங்களாகத் தோன்றும். நெத்தின் கூட்டில் கடுகு போன்ற சுனைகள் இருக்கும்.

பொதுவாகத் தோட்டங்களில் கிழங்கிற்காகப் பயிரிடப்படுகிறது. எல்லாவகை மண்களிலும் பயிரிடக் கூடியது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். விதைத்து 45-60 நாட்களிலேயே கிழங்குகளை அறுவடை செய்யலாம். அறுவடை செய்த கிழங்குகளை 3 அல்லது 4 நாட்கள் மட்டுமே கெடாமல் வைத்திருக்கலாம்.

இதன் கிழங்கு, பூ, இலை, விதை முதலிய அனைத்தும் மருந்திற்கு உதவுகின்றன. நன்கு முற்றாத கிழங்குகளை சமைத்துண்ணும் போது மருத்துவக் குணங்கள் கூடுதலாகக் கிடைக்கின்றன.

சிறுநீர்க் கற்களுக்கு சிறந்த ஓர் மருந்துப் பொருளாகும். சித்த மருத்துவத்தின் படி இதனை உணவாகவும், பல முக்கிய மருந்துகளை இதன் சாற்றினால் அரைத்தும் பல சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. கிழங்கோடுஇலைகளையும் சேர்த்துத் தான் பயன்படுத்த வேண்டும். இலைகளிலுள்ள சத்துக்கள் அத்தியாவசியமானவை. முற்றாத இளங் கீரையோடு கிழங்கையும் சேர்த்தே விவசாயிகள் விற்பனை செய்தல் நல்லது.

100 கிராம் முள்ளங்கி கிழங்கு, இலைகளிலுள்ள சத்துக்கள்.

இதன் பிஞ்சுக் கிழங்குகளுடன் உடன் தயிர், தக்காளி, தேங்காய்த் துண்டு, கொத்தமல்லி, புதினா சேர்த்து பச்சையாகச் சட்னி செய்யலாம். இதனால் பசியைத் தூண்டும். வயிற்றுப் புழுக்களைக் கொல்லும்.

தினம் இடித்த கிழங்குச் சாற்றை 15 மில்லி அளவு அருந்திவர சிறுநீரக தாரை நோய்களையும் மூலத்தையும் குணமாக்கும்.

முள்ளங்கிக் கிழங்கை வாரம் இருமுறை சமைத்து சாப்பிட்டு வர வயிறு எரிச்சல், வயிற்றுப் புண், ஆசனக் கடுப்பு, தோல் நோய்கள் ஆகியன தீரும்.



இதன் பச்சை இலைச் சாறு 15 மில்லி அளவு எடுக்க சிறுநீர் நன்கு கழியும், மலம் இளகும்.

வெள்ளை முள்ளங்கியை தோல் சீவி, சிறுசிறு துண்டுகளாக நறுக்கி நன்றாக உலர்த்தி பின்பு இடித்து தூளாக்கி அரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இத் தூளில் 1 தேக்கரண்டி (8 கிராம்) காய்ச்சிய பசுவின் பாலுடன் அருந்தி வர இருமல், வயிற்றுப்புண், வயிற்றில் ஏற்படும் எரிச்சல் ஆகியவை குணமாகும்.

இத்தூளில் 1 தேக்கரண்டி அளவு தேனில் சாப்பிட களித் தொல்லைதலைப்பாரம், தலை வலி நீங்கும்.

இத் தூளில் 1/2 தேக்கரண்டி அளவு எடுத்து தேவையான அளவு பசு நெய் கலந்து, காலை, மாலை சாப்பிட மூல நோய்கள் மற்றும் கரப்பான் போன்ற தோல் நோய்கள் குணமாகும்.

இத் தூளில் 1/2 தேக்கரண்டி அளவு திராட்சைப் பழம் சாற்றுடன் (கறுப்பு இனம்) கலந்து சாப்பிட முரசு, பற்கள் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

முள்ளங்கியை இடித்து சாறு எடுத்து சம அளவு சீனி சேர்த்து ஏலம், சுக்குப் பொடி அளவாக சேர்த்து சர்பத் பதமாக காய்ச்சி 1தேக்கரண்டி அளவு காய்ச்சி பசுவின் பாலில் கலந்து கொடுத்துவர குழந்தைகட்கு ஏற்படும் சிறுநீரகக் கற்கள் குறைவதுடன் உடல் வளர்ச்சி பெறும். நரம்பு வலிமை பெறும். என்புகளும் பலப்படும் குழந்தைகட்கு எளிதில் சீரணமாகும் சிறந்த டொனிக் ஆகும்.

| முள்ளங்கி | வெள்ளைக் கிழங்கு | இலை |
|---|---|---|
| புரதம் | 0.7 கிராம் | 3.8 கிராம் |
| கொழுப்பு | 0.1 கிராம் | 0.44கிராம் |
| நார்ப்பொருள் | 0.8 கிராம் | 1.0 கிராம் |
| காபோவைதரேற்று | 3.4 கிராம் | 2.4 கிராம் |
| கல்சியம் | 35 மி.கிராம் | 265 மி. கிராம் |
| பொஸ்பரஸ் | 22 மி. கிராம் | 59 மி.கிராம் |
| இரும்பு | 0.4 மி.கிராம் | 3.6 மி. கிராம் |
| தயமின் | 0.06 மி.கிராம் | 0.18 மி. கிராம் |
| ரைபோபிளேவின் | 0.02 மி. கிராம் | 0.47 மி.கிராம் |
| விற்றமின் சி | 15 மி. கிராம் | 81 மி. கிராம் |
| கரோட்டீன் | 3 மைக்ரோ கிராம் | 5295 மைக்ரோ கிராம் |


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

முள்ளங்கிக் கிழங்கை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். இதில் 200 கிராம் சேர்த்து நீரில் கலந்து காய்ச்சி கம்பிப்பதம் வந்ததும் ஏலரிசி 15 கிராம், சுக்கு 15 கிராம் நன்றாக பொடித்து அரித்த பொடியையும் மேற்படி முள்ளங்கித் தூளையும் போட்டு நன்றாகக் கிளறித் தேன் 50மில்லி, பசு நெய் 50 மில்லி கலந்து லேகிய பதமாக தயாரித்து வைத்துக் கொள்ளவும். 5 கிராம் அளவு காலை, மாலை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் தளர்ச்சி களைப்பு நீங்கும், முதியோருக்கு சிறந்த டொனிக் ஆகும்.

அதி உயர் குருதி அமுக்கம், உடற் பருமன், சிறு நீரகக் கற்கள் உடையவர்கள் தாராளமாக முள்ளங்கிக் கிழங்கை பயன்படுத்தலாம்.



# ருத்ரதாண்டவம்





பிலிப்பைன்சில் இயற்கையின் ருத்ரதாண்டவத்தால் ஏராளமான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து நடு வீதிகளுக்கு வந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் அதிவேக புயல் மணிக்கு 133 கி.மீற்றர் வேகத்தில் வீசியதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். இதன் காரணமாக அப்பகுதியில் மின்சாரம் முழுவதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி வாகனங்கள், அங்கிருந்த மரங்கள் என அனைத்தும் புயலை தாக்குபிடிக்க முடியாமல் தூக்கியெறியப்பட்டன. புயல் தாக்கத்தின் காரணமாக திடீரென்று வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது.இதில் மரம் விழுந்து நான்கு பேர் உயிரிழந்திருந்தனர்.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில்,

தங்கள் வீடுகளை விட்டு வெளிவர ஒரு சிலர் மறுத்ததாகவும், அவர்களுக்கு புயல் குறித்து எச்சரிக்கை விடுத்தும் அவர்கள் மறுப்பதாக தெரிவித்தார்.

சூறாவளியின் உச்சக்கட்டத்தால் ஏராளமான வாகனங்கள் தூக்கி வீசப்பட்டதால் பொதுமக்கள் பலரும் நடந்து செல்வதாக கூறியுள்ளார். வீடுகள் முழுவதும் தண்ணீர் சூழ்ந்ததால் பொது மக்கள் அனைவரும் சற்று சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

குறிப்பாக Milaor, Quezon city உள்ளிட்ட பகுதிகளில் அதிகம் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.மேலும் அந்நாட்டில் சிவப்பு அறிக்கை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)





## விமான விபத்தில் பலியானவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் தீவிரம் ஜனாதிபதி புடின் உத்தரவு

(மொஸ்கோ)

கருங்கடல் பகுதியில் விபத்திற்குள்ளான ரஷ்யா விமானத்தில் உயிரிழந்த பயணிகளின் உடல்களை மீட்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 11 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக ரஷ்ய மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சோச்சி தீவில் இருந்து சிரியா நோக்கி புறப்பட்ட விமானம், கருங்கடல் பகுதியில் விபத்திற்குள்ளாகியது.

இந்த விமானத்தில் இசைக் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உட்பட 92 பேர் பயணித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்ததாக அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த மீட்புப் பணிகளில் 3 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர்களில் 109 பேர் சுழியோடுபவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யாவில் விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக நேற்று முன்தினம் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் தேசிய துக்கதினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த விபத்திற்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும், விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறினாலேயே குறித்த விமானம் விபத்திற்குள்ளாகியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறு அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-10)

## ரஷ்ய விமானத்தின் பாகம் கருங்கடலில் கண்டுபிடிப்பு



(மொஸ்கோ)

ரஷ்யாவில் விபத்துக்குள்ளான விமானத்தின் பாகம் கருங்கடல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டு போர் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளை அடக்க அங்கு ரஷ்ய இராணுவம் முகாமிட்டுள்ளது.

அவர்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் வீரர்களுடன் ரஷ்ய இராணுவ விமானம் புறப்பட்டு சென்றது.

அதில் புத்தாண்டு பண்டிகையை கொண்டாட இராணுவ இசைக்குழுவை சேர்ந்த 64 பேரும் இடம்பெற்றிருந்தனர்.

மொத்தம் 92 பேர் விமானத்தில் பயணம் செய்தனர்.

சோச்சி நகரில் இருந்து புறப்பட்ட அந்த விமானம் சிறிது நேரத்தில் கருங்கடலில் விழுந்து நொறுங்கியது.

அந்த விமானத்தில் பயணம் செய்த அனைவரும் பலியாகினர்.

அதைத் தொடர்ந்து விபத்தில் பலியானவர்களை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

அதில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

ரஷ்யாவில் விபத்துக்குள்ளான விமானத்தின் பாகம் கருங்கடல் பகுதிக்குள் கிடைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய பாதுகாப்பு சேவை அமைப்பு சார்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்கான காரணம் குறித்து இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (இ-7)

## கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கொங்கோவில் இனக்கலவரம்

### பலி எண்ணிக்கை 35 ஆக உயர்வு

(கின்ஷாசா)

கொங்கோ நாட்டில் கிறிஸ்மஸ் பண்டிகையின் போது இரு பிரிவினரிடையே நடைபெற்ற இனக் கலவரத்தில் பலியானோர் எண்ணிக்கை 35ஆக உயர்ந்துள்ளது.

கொங்கோ நட்டின் வடக்கு கிவு மாகாணத்தில் நந்தே என்ற இனத்திற்கும், ஹுது என்ற இனத்திற்கும் இடையே மோதல் இருந்து வருகிறது.

இந்நிலையில் கிறிஸ்மஸ் நாளான கடந்த ஞாயிற்றுக் கிழமை மற்றும் அதற்கு முதல் நாள் இந்த இரண்டு இனக் குழுவினருக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. கொங்கோவின் வடக்கு கிவு பகுதியில் குறிப்பிட்ட சில கிராமங்களில் இந்த கலவரம் வெடித்தது.

ஜனநாயக கூட்டுப் படை பிரிவை சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் எரிங்கெட்டி பகுதியில் கடந்த சனிக்கிழமை நடத்திய திடீர் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்த வன்முறையில் உயிரிழப்பு 35ஆக உயர்ந்தது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் ஹுது பிரிவை சேர்ந்தவர்கள்.

முன்னதாக, கொங்கோ ஜனநாயக குடியரசு நாட்டில் ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் கடந்த டிசெம்பர் 19ஆம் திகதியுடன் முடிவடைந்தது. பதவிக் காலம் முடிந்த பின்னும் ஜனாதிபதி ஜோசப் கபிலா, ஆட்சியை விட்டு எப்போது விலகுவார் என்பது குறித்து எந்த தெளிவும் இல்லை.

இதனால் ஜனாதிபதிக்கு எதிராக அந்நாட்டின் பல்வேறு எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட் டங்களின் போது, கொங்கோ பொலிஸாருக்கும், கிளர்ச்சியாளர்கள் குழுவினருக்கும் இடையே பல்வேறு இடங்களில் வன்முறை நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரஷ்யாவிற்கு வெடிகுண்டு அச்சுறுத்தல்; 3000 பேர் வெளியேற்றம்; பீதியில் மக்கள்

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள ரயில் நிலையங்களுக்கு வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்து நாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மர்ம நபரிடமிருந்து வந்த வெடிகுண்டு அச்சுறுத்தலை தொடர்ந்து மொஸ்கோவில் உள்ள Kazansky, Leningradsky மற்றும் Yaroslavsky ரயில் நிலையங்களிலிருந்து 3,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பின்னர், மோப்ப நாய்களின் உதவியுடன் பொலிஸார் நேற்று சோதனையில் ஈடுபட்டனர்.

முன்னதாக, 92 பேருடன் சிரியாவிற்கு பயணித்த ரஷ்ய இராணுவ விமானம் கருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானதை தொடர்ந்து வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதால் நாட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான எந்த அறிகுறிகளும் இல்லை என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ-7)

# ராம மோகனராவ் வீடு திரும்பினார்



வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முன்னாள் தலைமைச் செயலாளர் ராம மோகனராவ் வீடு திரும்பியுள்ளார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகனராவின் வீட்டில் வருமான வரித்துறையினர் நடத்திய அதிரடிச் சோதனையில் பல இலட்சம் ரூபாய், தங்கம் மற்றும் சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யபபடடன.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் நெஞ்சுவலி ஏற்பட்டதாக கூறி, ராம மோகனராவ் போரூரில் உள்ள ராமச்சந்திரா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு இருதய சிகிச்சைப் பிரிவில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சில இருதய பரிசோதனைகள் முடிந்து தொடர்ந்து வைத்தியர்களின் கண்காணிப்பில் இருந்து வந்தார். 2ஆவது நாளாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் சிகிச்சை பெற்றார்.

இந்த நிலையில் ராம மோகன ராவ் மற்றும் அவருடைய மகன் விவேக் ஆகியோர் வீடு மற்றும் அலுவலகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பணம், தங்கம் மற்றும் ஆவணங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக இருவருக்கும் வருமானவரித் துறையினர் 'சம்மன்' அனுப்பி இருந்தனர்.

சம்மனை பெற்றுக்கொண்டு ஆஜராகாத ராம மோகனராவ் நெஞ்சுவலி ஏற்பட்டதாக கூறி போரூர் ராமச்சந்திரா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். அதேபோல் அவருடைய மகன விவேக்கும் அவரது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் வருமானவரித் துறை அதிகாரிகள் முன்பு ஆஜராகவில்லை.

இதனால் ராம மோகனராவ வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டாலும், அவரை அங்கு கைது செய்து தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இந்த நிலையில், வைத்திய பரிசோதனைகளை முடிததுக் கொண்டு ராம மோகனராவ் வீடு திரும்பினார். நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராம மோகனராவ், சென்னை அண்ணாநகர், ஒய்.பிளாக், 6ஆவது மெயின் ரோட், முதலாவது தெருவில் உள்ள அவரது வீட்டுக்கு திரும்பிய பிறகு வருமான வரித்துறையினர் அவரிடம் எப்போது வேண்டுமானாலும் விசாரணையை தொடங்கலாம் எனத் தெரியவருகிறது. (இ-7)

# மக்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்க மோடி தயாராக வேண்டும்-லல்லு பிரசாத்



ரூபாய் நோட்டு பிரச்சினை தொடர்பாக மக்கள் கொடுக்கும் தண்டனையை ஏற்க மோடி தயாராக வேண்டும் என்று ராஷ்ட்ரீய ஜனதாதளம் தலைவர் லல்லுபிரசாத் யாதவ் தெரிவித்தார்.

ரூபாய் நோட்டு பிரச்சினை தொடர்பாக மத்திய அரசைக் கணடித்து பீகாரில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் பெரிய அளவில் போராட்டத்தை நடத்த உள்ளது. இதற்காக மக்களின் ஆதரவை திரட்டும் வகையில் ரத யாத்திரை நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. பாட்னாவில் நடந்த இந்த நிகழ்ச்சியை ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் லல்லுபிரசாத் யாதவ் நேற்று தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

ரூபாய் நோட்டு விவகாரததால் மக்கள் பெரும் கஷ்டத்தை சந்தித்து வருகிறார்கள். உயர் மதிப்பு ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்ததும் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை அடுத்து கோவாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசும்போது, இன்னும் 50 நாட்கள் பொறுத்துக் கொள்ளுங்கள். எல்லாம் சீராகி விடும். அதற்குள் நிலைமை சீராகாவிட்டால் எனக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடுங்கள் என்று கூறினார்.

அவர் சொன்னபடி வருகிற 30ஆம் திகதியுடன் அவரது 50 நாள் கெடு முடிகிறது. ஆனால், நிலைமை தொடர்ந்து மோசமாகித்தான் வருகிறதே தவிர, எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. பிரதமர் மோடி கூறியதன்படி நடக்காததால் மக்கள் தண்டனை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அதை ஏற்க பிரதமர் மோடி தயாராக இருக்க வேண்டும்.

முதலில் கறுப்பு பணத்தை ஒழிக்க ரூபாய் நோட்டு செல்லாது எனத் தெரிவித்தார். இப்போது பணம் இல்லா பரிவர்த்தனை என்று புதிய திட்டத்தை கூறுகிறார். அவரால் ஒரு உறுதியான முடிவை எடுக்க முடியவில்லை.

ரூபாய் நோட்டு செல்லாது என அறிவித்த போது, அவர் ஏதோ வித்தை காட்டப்போகிறார் என நினைத்தோம். ஆனால், அவர் ஒட்டு மொத்தமாக குழம்பி மற்றவர்களையும் குழப்பி நாட்டையே கேலிக் கூத்தாக்கி விட்டார். இன்று நாடு ஒரு இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிவிப்பை வெளியிடுகிறார். நாட்டை அவர் எந்தப் பாதையில் வழி நடத்தி செல்கிறார் என்றே தெரியவில்லை.

இந்த பிரச்சினை தொடர்பாக அவருக்கு எதிராக ராஷ்ட் ரீய ஜனதா தளம் 28ஆம் திகதி (இன்று) பெரும போராட்டத்தை நடத்துகிறது. அதன் பிறகு பாட்னாவில் மிகப் பெரிய ஊர்வலம் ஒன்று நடத்தப்படும்.

உத்தரப்பிரதேச தேர்தலில பாரதீய ஜனதா இப்போது களத்திலேயே இல்லை. அங்கு பீகாரில் ஏற்பட்ட நிகழ்வு போல சமாஜ்வாடி கட்சி ஆட்சியை பிடிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

# ராம மோகனராவ், மகனின் கடவுச்சீட்டை முடக்கத் திட்டம்

(சென்னை)

வெளிநாட்டுக்கு தப்பிச் செல்லாமல் இருக்க முன்னாள் தலைமைச் செயலாளர் ராம மோகனராவ் மற்றும் அவருடைய மகன் விவேக் ஆகியோரின் கடவுச்சீட்டுக்களை முடக்க வருமான வரித்துறை திட்டமிட்டுள்ளது.

தமிழகத்தில் வரிஏய்ப்பு மற்றும் கறுப்புப் பணம் ஒழிப்புக் குறித்து வருமான வரித்துறை கடந்த சில நாட்களாக தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக நுங்கம்பாக்கத்தில் உத்தமர் காந்தி சாலையில் உள்ள வருமான வரித்துறை அலுவலகம் மற்றும் வருமானவரி புலனாய்வுப் பிரிவு அலுவலகங்களில் இரவு, பகலாக அதிகாரிகள் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இந்த அலுவலகங்களில் கடந்த சில நாட்களாகவே வெளிமாநில அதிகாரிகள் வருவதும் கூட்டங்களில் பங்கேற்பதும் பிறகு திரும்பி செல்வதுமாக இருக்கிறது.

வருமான வரித்துறை அதிகாரிகள் மற்றும் விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். வெளி ஆட்கள் யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதனால் இந்த அலுவலகத்தின் வெளியே எப்போதும் பரபரப்பாக காணப்படுகிறது.

முன்னாள் தலைமைச் செயலாளர் ராம மோகனராவின் மகன் விவேக் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்காக வருமான வரித்துறை விவேக உள்ளிட்டோருக்கு 'சம்மன்' அனுப்பியிருந்தது. ஆனால் தன்னுடைய மனைவியின் உடல்நிலையை காரணம் கூறி விசாரணைக்கு ஆஜராக கால அவகாசம் வழங்க வேண்டும் என்று அவர் கேட்டிருந்தார்.

இந்த கால அவகாசம் முடிவடைந்ததைத் தொடர்ந்து வருமானவரி புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் அதிகாரிகள் குழுவினர், விவேக்கிடம் விசாரணை நடத்துவதற்காக நேற்றுமுன்தினம் காத்திருந்தனர். ஆனால் நேற்று முன்தினம் இரவு வரை அவர் ஆஜராகவில்லை.

தொழிலதிபர் சேகர் ரெட்டி மற்றும் ராம மோகனராவ் அவருடைய மகன் வீடு மற்றும் அலுவலகங்களில் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து மற்றும் தொழில் ஒப்பந்தங்கள் குறித்த ஆவணங்களை வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து விசாரணை நடத்தியதில் சேகர் ரெட்டி மற்றும் விவேக் ஆகியோர் நடத்தி வரும் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியது மற்றும் பல்வேறு முறைகேடுகள் குறித்த வருமான வரித்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களில் அமைச்சர்கள் மற்றும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் வனத்துறை உள்ளிட்ட அதிகாரிகள் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இவர்களுடைய வீடுகளில் சோதனை நடத்துவதற்காக வருமான வரித்துறை 140 இந்திய வருவாய் பணிகள் (ஐ.ஆர்.எஸ்.) அதிகாரிகளை சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் களம் இறக்கியுள்ளது. எந்த நேரத்திலும் சோதனை நடத்த தயார் நிலையில் இருக்குமாறு அந்த அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் சோதனை நடத்துவதற்காக ஜார்கண்ட் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வாகனங்களில் அதிகாரிகள் வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் சென்னை, நுங்கம்பாக்கம், உத்தமர் காந்தி சாலையில் உள்ள வருமான வரி புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் தொழில் அதிபர் சேகர் ரெட்டியின் 2 கார்கள், ராம மோகனராவ் மகன் விவேக் ஆகியோரின் விலை உயர்ந்த சொகுசு கார்களுக்கு 0005 என்ற எண்ணை ராசி எண்ணாக கருதிப் பெற்றுள்ளனர். இந்த கார்கள் சென்னை மற்றும் கரூர் மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டவை ஆகும்.

வருமானவரித்துறை அதிகாரிகள் கூறுகையில், "ராம மோகனராவ் மற்றும் அவருடைய மகன் விவேக் ஆகியோருடைய வீடுகளில் பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரிப்பதற்காக காத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் அவர்கள் மருத்துவ காரணங்களை கூறுவதால் இருவரையும் முறையாக விசாரிக்க முடியவில்லை. எனவே விவேக்கிற்கு மீண்டும் நினைவூட்டும் கடிதம் அனுப்பி உள்ளோம். விசாரணைக்கு வருவார் என்று நம்புகிறோம்.

ராம மோகனராவும், அவரது மகன் விவேக்கும் வெளிநாடுகளுக்கு தப்பிவிடக்கூடாது என்பதற்காக இருவருடைய கடவுச்சீட்டுக்களையும் முடக்குவது குறித்து ஆலோசித்து வருகிறோம்" என்றனர். (இ-7)

# தமிழகத்தை அதிர வைத்த போயஸ் கார்டனின் முதல் சோதனை அப்போது சிக்கியது என்ன தெரியுமா?

(சென்னை)

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

ஜெயலலிதா முதல்வராக இருந்த போது போயஸ் கார்டனில் தலைமைச் செயலர் ராமமோகன ராவுக்கு ஒரு அறை ஒதுக்கப்பட்டிருந்தது.

ஒரு அறையில் ஜெயலலிதா பார்க்க வேண்டிய கோப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

இந்த 2 அறைகளை சோதனையிடத் தான் தற்போது 2ஆவது முறையாக போயஸ் கார்டனுக்குள் வருமான வரித்துறை அதிகாரிகள் நுழைந்தனர்.



முன்னதாக ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணைக்காக 1996ஆம் ஆண்டு வருமான வரித்துறை அதிகாரிகள் முதன் முறையாக போயஸ் கார்டனுக்குள் நுழைந்தனர்.

நல்லம நாயுடு தலைமையிலான இந்த ரெய்டில் 100 உயர் ரக கைக்கடிகாரங்கள், 30 கிலோ தங்கம், 400 ஜோடி வளையல்கள், 500 கிலோ வெள்ளி, 10,000 சேலைகள், 250 ஜோடி செருப்புகள் கைப்பற்றப்பட்டன.

ஜெயலலிதா வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட இந்தப் பொருட்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. (இ)

# கேள்விக்குள்ளான இலங்கை நீதித்துறையின் நம்பகத்தன்மை





விடுவிக்கப்பட்ட கடற்படை புலனாய்வாளர்கள்

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா, ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து குற்றவாளிகளும் விடுவிக்கப்பட்டமையானது இலங்கையின் நீதிச் சேவை மீதான நம்பகத்தை மீண்டும் சந்தேகத்திற்குள்ளாக்கியுள்ளது.

குறிப்பாக, இலங்கை இராணுவத்தினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு படுகொலை வழக்குகள் தொடர்பில் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையை சந்தேகத்திற்கு உள்ளாக்கியுள்ளது. சிங்கள ஜூரிகள் சபையின் தீர்ப்பைத் தொடர்ந்து, 2006 இல் கொல்லப்பட்ட ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட மூன்று கடற்படை அதிகாரிகள் உட்பட ஐந்து பேர் கடந்த சனிக்கிழமை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பிரச்சினை தொடர்பாக சிங்களவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், தமிழ்த் தேசியப் பிரச்சினையை சிங்கள மொழியில் வெளிப்படுத்துவதில் அயராது பணியாற்றினார். நவம்பர் மாதம் 10 ஆம் திகதி 2006 அன்று கொழும்பு வீதி ஒன்றில் ரவிராஜூம் அவரது பாதுகாவலர் ஒருவரும் சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டனர்.

ரவிராஜ் படுகொலையில் இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினரே தொடர்புபட்டிருந்தனர் என்பதற்கான சாட்சியத்தை இலங்கை குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் சட்டமா அதிபர் திணைக்களமும் கண்டறிந்தனர் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதற்கும் அப்பால் குற்றம் சாட்டப்படாத வேறு பலரும் இக் கொலையுடன் தொடர்புபட்டுள்ளனர் என அரச சட்டவாளரால் அறிவிக்கப்பட்டது.

'ஒரு சில இளநிலை கடற்படை அதிகாரிகள் மட்டும் ரவிராஜைப்படுகொலை செய்யவில்லை. இவர்கள் வேறு யாரிடமிருந்தோ கட்டளைகளைப் பெற்றே இப்படுகொலையை மேற்கொண்டனர். ஆனால் இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இக்கொலைகளுப் பொறுப்பாளிகள் அல்லர்.

இப்படுகொலையானது பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது. இப்படுகொலைக்கு கட்டளை வழங்கியவர்கள் யார் என்பதைக் கண்டறிய நாம் தற்போதும் காத்திருக்கிறோம் என சுமந்திரன் தெரிவித்தார்.

ரவிராஜைப் படுகொலை செய்வதற்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவினால் கருணா குழுவிற்கு 50 மில்லியன் ரூபா வழங்கப்பட்டதாக அரச தரப்பில் சாட்சி வழங்கிய கடற்படை வீரர் ஒருவர் விசாரணையின் போது தெரிவித்திருந்தார் என கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் சாட்சிகளால் வழங்கப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட முடியாது என்பதால் அவர்களை விடுவிக்குமாறு சிங்கள ஜூரி சபை தெரிவித்தது.

இப்படுகொலை வழக்குத் தொடர்பான சட்ட நடவடிக்கையானது முரண்பாடுகளைக் கொண்டுள்ளதாக சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வழக்கில் இரண்டு வகையான சட்டங்கள் தொடர்புபட்டுள்ளன.

அதாவது இலங்கை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டம் ஆகிய இரு சட்டங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கடற்படை அதிகாரிகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர்.

அதேவேளையில் இவர்களுக்கான பிணையானது சாதாரண சட்டத்தின் அடிப்படையில் ஜூரி சபையால் அனுமதிக்கப்பட்டதாகவும் ஜூரி சபையின் விசாரணைக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அனுமதிக்காத போதிலும் சாதாரண சட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கு பிணை வழங்கப்பட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஜூரி சபையானது தீர்ப்பை வழங்க முடியாது. இது சட்டத்திற்கு முரணானது எனவும் சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த வழக்கின் தீர்ப்பானது நீதிச்சேவையில் தமிழ் மக்களுக்கான நீதி புறக்கணிப்படுகிறது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தும் ஒரு சாட்சியாக உள்ளதாக சிலர் நோக்குகின்றனர்.


இதுபோன்ற வழக்குகளில் தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் என்கின்ற இன வேறுபாடானது பிரதான காரணியாக உள்ளது. தமிழர் ஒருவர் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டதன் மூலம் மட்டும் நீதி முறைமைக்குள் காணப்படும் பாரபட்சங்களை நீக்கமுடியாது என மூத்த ஊடகவியலாளரும் அரசியல் விமர்சகருமான குசல் பெரேரா தெரிவித்தார்.

2015 இல் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பிரதம நீதியரசராக தமிழரான கனகசபாபதி சிறிபவான் நியமிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வழி மூலம் - The Hindu
ஆங்கிலத்தில் - Meera Srinivasan
மொழியாக்கம் - நித்தியபாரதி

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 940

நிஷாந்தினி




நிரஞ்சலா




சோபிகா


கோபம் செயலில்
இருக்கக்கூடாது
வார்த்தையில் இருக்கனும்
அன்பு வார்த்தையில்
இருக்கக்கூடாது
செயலில்ல இருக்கனும்

சௌந்தரி

பெற்றோர்களின் அருமை தெரிய
வேண்டுமென்றால்,
சொந்தக்காரர்களோடு தங்கிப்பார்.

சொந்தக்காரர்களின் அருமை தெரிய
வேண்டுமென்றால்,
காசு இல்லாமல் வாழ்ந்து பார்.

சங்கவி




சுடோஷினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணி அறிக்கை ஜனவரி 3 இல் வெளியாகிறது

(கொழும்பு)

நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் அறிக்கை எதிர்வரும் 2017 ஜனவரி 03 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது. அதேநாளில் இந்த அறிக்கை இணையத்தளத்தில் பகிரங்கமாக வெளியிடப்படும் என்று நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியின் செயலர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

தமது செயலணி பல்வேறு சமூகங்களுடன் நடத்திய நேரகாணல்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், மதத் தலைவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்கள், குழு நிலை விவாதங்கள், மூலம், 7500 யோசனைகளைப் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார். இந்த யோசனைகளின் அடிப்படைகள் தமது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணியானது கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# புகையிலைக் கம்பனிகளின் பணத்தில் நிவாரணம் வழங்க நான் தயாரில்லை

## அமைச்சர் ராஜித விடாப்பிடி

(கொழும்பு)



புகையிலைக் கம்பனிகளின் பணத்தைக் கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க தான் தயாரில்லையென சுகாதாரம் மற்றும் போஷாக்கு அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

களுத்துறை, தினியாவல கிராமிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கு அடிகல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தொடர்ந்தும் உரையாற்றுகையில், புகையிலை மீதான வரியை அதிகரிப்பதற்கு தீர்மானித்த போது அமைச்சரவையில் ஒரு சிலர் 100 பில்லியன் ரூபாவை இழக்க நேரிடும் என்று தெரிவித்தனர்.

புகையிலைக் கம்பனியை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்றனர். ஆனால் புகையிலைக் கம்பனியைப் பாதுகாக்க மாட்டேன் என்று ஜனாதிபதி தெளிவாகக் கூறினார்.

புகையிலைக் கம்பனி மூடப்படுவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டு மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கே நான் முதலிடமளிக்கின்றேன்.

ஜனவரி 8 ஆம் திகதி நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகின்றோம். 2020 ஆம் ஆண்டு வரையும் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களையே நாம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்திருக்கின்றோம். அவற்றையே செயலுருப்படுத்தி வருகின்றோம்.

அன்று மக்கள் வாழ்க்கைச் செலவு குறித்து கதைக்கவில்லை. அவர்கள் அன்று நிலவிய முறைமையை மாற்றவே விரும்பினர். ஜனாதிபதியின் அதிகாரங்கள் ஒவ்வொன்றாகக் குறைவடைந்து வருகின்றது.

புத்த பிரானைக் கூட விமர்சிக்க முடிந்த இந்த உலகில் எமது நாட்டின் யாப்பின் படி ஜனாதிபதியை விமர்சிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நிலைமையை நாம் மாற்றியுள்ளோம். இன்று எவரும் ஜனாதிபதியை விமர்சிக்க முடியும்.

புதிய யாப்பின் ஊடாக ஜனாதிபதி முறைமை முற்றாக இல்லாமல் போகும். தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வேலைத்திட்டம் இலங்கையில் செயற்படுத்தப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் ஏற்றுக் கொண்டுள்ளது. அவ்வாறான வேலைத்திட்டம் உலகில் எங்கும் இல்லை.

அதனால் அரசாங்க செலவில் நோய்கள் தொடர்பான பரிசோதனை நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-10)

# ஈழத்தமிழரின் உணவு தவிர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்தம்

இந்தியாவிற்கு சுற்றுலா விசாவில் சென்ற போது கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்களும் அகதி முகாமிலுள்ள ஈழத் தமிழர்களும் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி திருச்சி விசேட முகாமில் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்டுவந்த உணவு தவிர்ப்பு போராட்டம் தற்காலிகாக கைவிடப்பட்டுள்ளது.

உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்த ஈழத் தமிழர்களுடன் மாவட்ட துணை ஆட்சியாளர் நடராஜன் மற்றும் திருச்சி மாநகர சட்ட ஒழுங்கு துணை காவல் ஆணையாளர் வீ.மந்திரமூர்த்தி ஆகியோர் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையை தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாம் முன்வைத்த இரண்டு கோரிக்கைகள் குறித்து நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டதாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஈழத் தமிழர்கள் தெரிவித்தனர்.

இதில் தமது விடுதலை தொடர்பாக சாத்தியமான பதிலை உயர்மட்டத்தில் இருந்து பெற்றுத்தருவதாக வாக்குறுதி வழங்கப்பட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வழக்குகள் நிறைவடையும் வரை வேலைவாய்ப்பை பெற்றுத்தருமாறு தாம் முன்வைத்த கோரிக்கைக்கும் உறுதி வழங்கப்பட்டுள்ளதாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவந்த ஈழத் தமிழர்கள் தெரிவித்தனர்.

கடந்த 23 ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த ஈழத் தமிழர்களில் நடனசபாபதி பிரபாகரன் மற்றும் நாகராஜன் குணசீலன் ஆகிய இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த இருவரையும் பொலிஸார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்ட போது, தமது கோரிக்கை நிறைவேறும் வரை வைத்தியசாலைக்கு செல்ல மாட்டோம் என குறித்த இருவரும் கூறியிருந்தனர்.

இந்தியாவிற்கு ஆலய தரிசனத்திற்காக சென்றிருந்த போது, விடுதியொன்றில் தங்கியிருந்த தம்மை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்ததாகவும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## கடைசிக்குத் தள்ள வேண்டும்

இரு நண்பர்கள் அல்லது உறவினர்கள் நீண்ட நாள் கழித்துச் சந்தித்துக் கொள் கிறார்கள்.

நீங்கள் எல்லாம் ரொம்ப பெரிய மனுஷனா ஆயிட்டீங்க. கண்டுக்கவே மாட்டேங்குறீங்க ! லெட்டர் போட்டேன்! பதிலே காணோம்! காரியம்னா தான் வந்து பார்ப்பீங்க போலிருக்கு! என்று இருவருள் ஒருவர் ஆரம்பிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இது நட்புக்கும் உறவுக்கும் வைத்து விட்ட வெடியின் திரியைப் பற்ற வைப்பதைப் போன்றது.

மலரத் தொடங்கும் ஒரு மொட்டைக் கொள்ளியால் பொசுக் கென்று சுட்ட மாதிரி மற்றவரது உள்ளம் ஆகிவிடுகிறது. இது மனதிற்குள் கனன்று என்று மெல்ல மெல்ல வெறுப்பை வளர்க்கிறது.

இப்படி ஒருவர் ஆரம்பிப்பதை மட்டம் தட்டுவதாகவும் அல்லது நாம் வளர்வது இவருக்குப் பிடிக்கவில்லை என்பதாகவும் புரிந்து கொள்கிறார்கள். வம்பல்லவா இது. யாரைச் சந்தித்தாலும் சரி அவர் ஏதேனும் தவறு செய்திருந்தாலும் சரி, குறை காணும் படி நடந்து கொண்டிருந்தாலும் சரி எடுத்ததும் அதைத் தொடங்குவது புத்திசாலித்தனமாகாது.

அந்தச் சந்திப்பில் நமக்கு மகிழ்ச்சியே என்பதைத் தான் முதலில் உணர்த்த வேண்டும். பாராட்டுக்குரிய விடயம் ஏதும் இருந்தால் அதை முதலில் சொல்லலாம் . உதாரணமாக அந்தக் கோடி வீட்டுக் குப்புசாமி இல்லீங்க? அவருக்கு ஏதோ உதவி செஞ்சிசீங்களாமே! அவர் ரொம்பவும் பாராட்டினார். உங்களை என்று பேச்சை ஆரம்பிக்கலாம். அல்லது கொஞ்சம் நிறம் அதிகமாகி , பர்சனாலிட்டி இம்ரூவ் ஆகியிருக்கே? அந்த இரகசியத்தை எனக்குச் சொல்லித் தரப்படாதா? என்றும் தொடங்கலாம்.

இப்படிப்பட்ட ஆரம்பம் தான் சுமுகமாக விரியும் சூழ்நிலையை உருவாக்கும். இதற்குப் பிறகு தான் அவர்கள் நமக்காகக் காதை மட்டும் அல்ல இதயத்தையும் கொடுப்பார்கள்.

முகத்தைப் பார்த்ததுமே எதிர்த்த வீட்டு ஏகாம்பரம் மகனுக்கு காலேஜ் சீட் வாங்கித்தரேன்னு சொல்லிக் காலை வாரிட்டீங்களாமே! என்று பேச்சை ஆரம்பித்தாலோ எல்லாமே போச்சு!

சுமுக உறவு வேண்டும் என நினைப்பவர்கள் இது போன்ற தலைப்பைத் தொடவே கூடாது. தொட்டுத் தான் ஆக வேண்டும் எனும் விடயங்களை இடையிலோ கடைசியிலோ சொல்லலாமே தவிர, எடுத்தவுடன் அல்ல.

மனிதனுக்கு ஆரம்பத்திலேயே விரோதப் பார்வை விழுந்துவிட்டால் அப்புறம் ஒருவன் என்ன சொன்னாலும் எடுபடாது.

மனைவியின் சமையலைக் குறை சொல்ல நேரிடும் போது கூட நல்லாத் தான் சமைச்சிருக்கே! ரசத்தில கூடுதலாப் போட்ட உப்பைச் சாம்பாரிலே சேர்த்திருக்கலாம் என்று சொல்ல வேண்டுமே தவிர, சமையலா இது? ரசத்தில ஏகப்பட்ட உப்பு ! சாம்பார்ல ஒண்ணுமே இல்லை என்று புகார்த் தொனியில் பேசும் போது அது எடுபடாமல் போகிறது.

பேட்டி எடுக்கும் புதியவர்களுக்குக் கூட இப்படிச் சொல்லப்படுவதுண்டு. எடுத்தவுடன் பேட்டி தருபவர்களுக்குப் பிடித்தமான கேள்விகளைக் கேளுங்கள். விவகாரமான கேள்விகளை ஆகக் கடைசியில் வைத்துக் கொள்ளுங்கள் என்று.

**லேனா தமிழ்வாணன்**

# தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இந்திய-இலங். அதிகாரிகள் பேச்சுவார்த்தை

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தி வரும் பிரச்சினை குறித்து இந்தியா- இலங்கை அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை டில்லியில் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கை கடற்படையினரால் சுடப்படுவதும் தாக்கப்படுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. தமிழக மீனவர்கள் எல்லை தாண்டியதாக கைது செய்யப்படுவதும் அவர்களது படகுகளை சிறைபிடிப்பதும் தொடர்கிறது. தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு ஒரு சுமுக முடிவு காண பலகட்ட பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடந்துள்ளன.

கடந்த மாதம் இரு நாட்டு மீனவர் சங்க பிரதிநிதிகள் அளவிலான பேச்சுவார்த்தை டில்லியில் நடந்தது. அதனைத் தொடர்ந்து இரு நாட்டு மீன்வளத்துறை செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை டில்லியில் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது. இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் விகாஸ் கூறியதாவது,

இந்தியா-இலங்கை இடையேயான மீனவர் பிரச்சினை குறித்து கடந்த நவம்பர் 5ஆம் திகதி டில்லியில் நடந்த இருநாட்டு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அடுத்ததாக அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையும், அதனைத் தொடர்ந்து அமைச்சர்கள் அளவிலான பேச்சுவார்த்தையும் நடைபெறவுள்ளது.

துறை செயலாளர்கள் அளவிலான பேச்சுவார்த்தை 31ஆம் திகதி (சனிக்கிழமை) டில்லியில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து ஜனவரி 2ஆம் திகதி கொழும்பில் இருநாட்டு அமைச்சர்களின் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

அதிகாரிகள் மட்டத்தில் நடைபெறும் கூட்டத்தில் ஒரு சுமுக முடிவு எடுக்கப்பட்டு அமைச்சர்கள் பேச்சுவார்த்தையின்போது அது இறுதி செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. (இ-10)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய வாகனம் பொலிஸாரால் பறிமுதல்



வடமராட்சி வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்த ஹன்டர் வாகனம் ஒன்றை தாம் பறிமுதல் செய்ததாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் காலை மழை பெய்ததை சாதகமாகப் பயன்படுத்தியும் பொலிஸாரின் வருடாந்த அணி வகுப்பு நடைபெறுவதால் அவர்கள் வரமாட்டார்கள் என்பதனையும் பயன்படுத்தி சட்டவிரோத மணல் ஏற்றியதாக பொலிஸார் கூறினர்.

இருந்தும் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் றஞ்சித் மாசிங்கவால் அனுப்பப்பட்ட பொலிஸ் அணி சட்டவிரோத ஹன்டரை பறிமுதல் செய்தது. (இ-60)

# இடிந்துவிழும் நிலையில் சுனாமி நினைவுத் தூபி



கவனிப்பாரின்றி இருக்கும் சுனாமி நினைவுத்தூபி மண் அரிப்பினால் இடிந்து விழக்கூடிய நிலைமை காணப்படுகிறது. மணற்காட்டில் சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த 72 பேரினை அடக்கம் செய்த இடத்தில் அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டது. அதிலேயே பொதுச்சுடர் ஏற்றப்பட்டு வந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் தேவாலயத்திற்கு முன்பாக நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டதையடுத்து அவ்விடத்திலேயே இரண்டு வருடங்களாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டு வருகின்றது. இதனால் 72 பேரினை புதைத்த சவக்காலப்பிட்டியில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி கவனிப்பாரின்றி மண்அரிப்பு ஏற்பட்டு இடியக் கூடிய நிலையில் உள்ளது. (இ-60)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 22



**"அபாண்ட பழியால் நாங்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானோம். தாக்கியவரும் பாதிக்கப்பட்ட இருவரும் நீண்டகால நண்பர்களாக இருந்தவர்கள். தாக்கிய நபர் தமிழகத்தைச் சேர்ந்தவர். பிறகு ஏன் வடநாட்டு நபர் என்று திரித்துக் கூறினார்கள் எனத் தெரியவில்லை. எப்படியோ அந்தப் பழியை பெரும் வலியோடு கடந்தோம். காரணம் பதில் உரைப்பதாக இறங்கி யாரையும் காயப்படுத்தக்கூடாது என்ற நல்லெண்ணம் தான்."**

...இந்த இனம் அந்த இருவரையும் காரித் துப்பியிருக்குமே? நினைக்க நினைக்க நெஞ்சு பதறியிருக்கிறது. இரவெல்லாம் படித்துப் பார்த்து, எங்கெல்லாம் துரோக வார்த்தைகள் இருந்ததோ, அதையெல்லாம் அழித்து மீண்டும் அங்கே கையால் எழுதி, திருத்தப்பட்ட படிவமாக அதிகாலையில் கொடுத்திருக்கிறார். இந்த தகவலை சாந்தனிடமும் தெரிவித்தார்.

சாந்தனோ, தூக்குக் கிடைத்தாலும் பரவாயில்லை, படிக்காமல் மனுவை கொடுக்க முடியாது என்று வேறு ஒரு நம்பிக்கையானவரை வைத்து திருத்தம் செய்து, மூன்று நாட்கள் கழித்துத்தான் அந்த மனுவை வெளியே கொடுத்தனுப்பினார்.







கொஞ்சம் விட்டிருந்தாலும் அதுவே அந்த இருவருக்குமான தூக்குக்கயிற்றை உறுதி செய்திருக்கும். இறந்தாலும் பரவாயில்லை. இன விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாத போராட்டம் எனக் கொச்சைப்படுத்திய துரோகிகள் என காலமும் தூற்றியிருக்குமே? நல்லவேளை, கடவுள் அருளால் தப்பினார்கள்.

பிறகு இதே சட்டத்தரணி இன்னொரு உள்ளடி வேலையையும் செய்தார். தூக்கில் இருந்த மூவரைப் பற்றி பிரபல வார ஏட்டுக்கு பேட்டி கொடுத்தார். அதில் என் கணவரையும் சாந்தனையும் பற்றிக் குறிப்பிடும் போது, 'அவர்கள் வெளிநாட்டுக் காரர்கள்.

'விடுதலைப்புலி இயக்கத்தில் உறுப்பினராக இருந்தார் என்பதாலோ, பயிற்சி எடுத்தவர் என்பதாலோ கொலை வழக்கில் சம்பந்தப்பட்டார் என கூறுவதை ஏற்க முடியாது' என்று சங்கர் என்பவரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்ததை அந்த சட்டத்தரணி அறிந்திருக்க வாய்ப்பில்லை. எப்படியோ மூவரின் தூக்குக்கு எதிரான தடையாணை கிடைத்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்கள் கூடியதை ஒரு காரணமாகக் கூறி, அந்த வழக்கை டில்லி உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றினார்கள்.

சிறையில் இருந்த தொடக்க காலம் நாங்கள் மிகவும் வறுமையில் திண்டாடிக் கொண்டிருந்தோம். அந்த நேரம் பல உணர்வாளர்கள் பொருள் உதவியை செய்திருக்கிறார்கள். ஆனால், அந்த உதவிகள்கூட எங்களுக்கு வந்து சேரவேயில்லை.

இடையில் இருந்தவர்கள் தடுத்து விட்டிருந்தார்கள். அதுகூட என் அம்மா, தம்பி உட்பட 19 பேர் விடுதலையாகி வெளியே சென்ற பிறகு எட்டு ஆண்டுகள் கழித்துத்தான் தாமதமாக எனக்குத் தெரிய வந்தது.

அதேபோன்று பெண்கள் சிறையில் இருக்கும் என் நிலையிலும் ஒரு சிக்கல். உறவினர்கள் மற்றும் குறிப்பிட்ட மூன்று தலைவர்களைத் தவிர வேறு யாருமே வந்து சந்தித்தது இல்லை. சில தலைவர்கள், பிரமுகர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களை மணிக்கணக்கில் காக்கவைத்து, கடைசியாக நான் பார்க்க விரும்பவில்லை என்று கூறி திருப்பி அனுப்பியதும் நடந்திருக்கிறது.

அடுத்த முறை அவர்கள் பார்க்க வரக்கூடாது என்றவிதத்தில் நடந்திருக்கிறது. இந்தக் கொடுமையை எல்லாம் என்னவென்று கூறுவது? அண்மையில் கூட என் கணவர் மீதும் சாந்தன் மீதும் கொலைப்பழி சுமத்தி ஒரு இணையத்தில் செய்தி வெளியானது.

அபாண்ட பழியால் நாங்கள் பெரும் மன உளைச்சலுக்கு ஆளானோம். தாக்கியவரும் பாதிக்கப்பட்ட இருவரும் நீண்டகால நண்பர்களாக இருந்தவர்கள். தாக்கிய நபர் தமிழகத்தைச் சேர்ந்தவர். பிறகு ஏன் வடநாட்டு நபர் என்று திரித்துக் கூறினார்கள் என தெரியவில்லை. எப்படியோ அந்தப் பழியை பெரும் வலியோடு கடந்தோம். காரணம் பதில் உரைப்பதாக இறங்கி யாரையும் காயப்படுத்தக்கூடாது என்ற நல்லெண்ணம்தான். இப்படி தவிர்த்துவிட்டு கடந்து வந்த காயங்களே அதிகம்... போகட்டும்.

**சிறைவாசி நளினி**
**மகளிர் தனிச் சிறைச்சாலை**
**வேலூர்.**

(முற்றும்)

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்

# தேர்த்திருவிழா சிறப்புமலர்- 28.12.2016

# இணுவில், மருதனார்மடம், சுன்னாகம்.






## ஆசியுரை



அஞ்சனாதேவியின் தவப்பயனாய் மலர்ந்து அகிலமெங்கும் வீசும் காற்றின் வலிமையனாகி- தூய அன்பிற்கும் துளிர்க்கும் பக்திக்கும் சான்றாகி அவதாரம் செய்தவர் ஆஞ்சநேயப் பெருமான். இன்றைய உலகில் பேண வேண்டிய அன்பு, நேர்மை, விசுவாசம், பக்தி, அறங்களை பேணும் தன்மை என அனைத்தின் அடையாளமாக வீற்றிருப்பவரே இந்த ஆஞ்சநேயர் பெருமான். நம்பிக்கையோடு நாடிவரும் அடியவர்களின் துன்பம் களைந்து என்றும் இன்பம் பயக்கச் செய்யும் இறைவன் அவர். ராம நாமமே தாரக மந்திரமாய், ராம பாதமே உச்ச இலட்சியமாய் வாழ்ந்து வழிகாட்டிய வல்லமையாளன் இந்த மாருதி.

இத்தகைய ஸ்ரீசுந்தர ஆஞ்சநேய சுவாமி எங்கள் இணுவில் மருதனார்மடத்தில் சிறப்புற்றோங்கும் ஆலயத்தில் வீற்றிருந்து அருள் ஆட்சி நல்கிக்கொண்டிருப்பது நாமெல்லோரும் செய்த பாக்கியமே. ஐம்புலனையும் அகத்தடக்கி ஆன்மீக பிரவாகத்திற்கு வழிகாட்டும் இந்த ஹனுமந்தமூர்த்தி மார்கழி மூல நாளிலே அவதரித்த தினமே ஹனுமத் ஜெயந்தி பெருவிழா ஆகும். அதனை முன்னிட்டு எங்கள் ஆலயத்தில் பத்து தினங்கள் நடைபெறும் இலட்சார்ச்சனை பெருவிழாவை தொடர்ந்து இன்று பதினொராம் நாள் (28.12.2016) சுந்தர ஆஞ்சநேயன் இரதமேறி வருகின்ற திருக்காட்சி நடைபெறுகிறது.

அனைவரிடமும் உள்ள பாவவினைகளை சங்கரிக்க இந்த ருத்திர அவதார மூர்த்தி தேரேறி வருகின்றான். இந்த அற்புதச் சிறப்பை தரிசிக்க வருமாறு அனைவரையும் அழைப்பதோடு எல்லோருக்கும் இந்த அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயன் அனைத்து மங்கலங்களையும் பரமானந்த அனுபவத்தையும் வழங்க வேண்டும் என பிரார்த்தித்து அமைகின்றேன்.

''சர்வே ஜனகா சுகினோ பவந்து''


சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்,
மருதனார்மடம், சுன்னாகம், இலங்கை.


## உடுவில் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட ஈழத்திரு நாட்டின் வடபால் அமைந்துள்ளதே யாழ்ப்பாணக் குடாநாடாகும். இக்குடாநாட்டின் மத்தியில் அமைந்த பிரதேசமே வலிகாமம் தெற்கு பிரதேசமாகும். இங்கு மருதனார்மடம் சுன்னாகத்தில் அமைந்துள்ள அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயிலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது எம் முன்னோர் வாக்கு. இதற்கமைய வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள பல வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களில் இந்த ஆலயமும் பல சிறப்புக்கள் பொருந்தியது. மக்களின் வழிபாட்டிற்குரிய ஆலயங்கள் மனிதனை மனிதனாக மகிழ்த்துவத்துடன் பேணவும் சமய கலை, கலாசார விழுமியங்களைப் பேணும் கேந்திர நிலையங்களாகவும் அமைகின்றன. இவ்வாலயம் இரண்டு தளங்களைக் கொண்டதாகவும் மூலமூர்த்தியான ஆஞ்சநேயர் ஒரே கருங்கல்லில் வாக்கப்பட்ட 18 அடி உயரச் சிலையாக அமைந்துள்ளமையும் இதன் வாயிற் பகுதியில் 72 அடி உயரமான ஆஞ்சநேயர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களாகும். இவ்வாறு பல சிறப்பம்சங்களுடன் பொன் போன்று மிளிரும் கண்கொள்ளாக்காட்சியைக் கொண்டுள்ள இவ்வாலயத்தைப் போற்றி வணங்கும் அடியார்களுக்கும் ஆலய நிர்வாகத்தினருக்கும் அனைத்து அடியார்களுக்கும் ஆஞ்சநேயரின் அருளாசி கிடைக்க வேண்டுமென இறைஞ்சி வாழ்த்துகின்றேன். வாழ்க.


முத்துலிங்கம் நந்தகோபாலன், பிரதேச செயலாளர்,
வலிகாமம் தெற்கு, உடுவில்.


## ஆலய வரலாறு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இணுவில் மருதனார்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் 2001 தைத்திங்களில் குடமுழுக்கு நடைபெற்று ஆஞ்சநேயப் பெருமானின் அருளாலும் இறை அருள் பெற்ற விணாசித் தம்பி ஐயா அவர்களின் நல்லாசியும் ஆதீன கர்த்தாவின் அருள் நிறைந்த தவிப்பாலும் வளர்பிறையென ஆலயம் வளர்ச்சியுற்று மாமலைக் கோயிலின் முன்னால் கோபுரம் மலை என எழுந்து நிற்க சஞ்சீவி மடம் அருட் சிறப்பாய் அமைய பஞ்சமுக ஆஞ்சநேயர் தேடி வர வசந்த மண்டபம் சிறப்பாய் அமைய வீதி சுற்றி வழிபட காணிசேர பஞ்சமுகர் வீதியுலா வர சித்திரத்தேர் அமையவிஸ்வரூப ஆஞ்சநேயர் சிறப்பாய் அமைய சுற்று மதில்களோடு ஆலயம் சிறப்பாய் மிளிர 2013 இரண்டாவது குடமுழுக்கோடு நிறைவாக ஆலயம் அருட் சிறப்போடு விளங்கி 28.12.2016 இல் பஞ்சமுகர் தேரேறி வருகின்றார் என்றால் அனுமந்தன் பேரருளும் ஆசியுமே சான்றாகும்.

இந்த நாட்டிலேயே மட்டுமல்ல சுவிஸ் கனடா, ஜேர்மன், அமெரிக்கா, லண்டன், அவுஸ்திரேலியா, நோர்வே, கொலண்ட் போன்ற அந்நிய தேசத்திலிருந்து ஆலயத்தின் வளர்ச்சியிலும் சமூகப் பணியிலும் உபயத்தை ஏற்று செய்வதில் நிகரற்ற வர்களாகத் திகழ்கின்றார்கள். இன்று நடைபெறுகின்ற தேர் உற்சவத் திற்கு கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முதல் திருவாளர் சுப்பிரமணியன் கதிர்காமநாதன் தனது உபயமாக ஏற்று செய்திருக் கிறார்கள். ஒவ்வொரு வருடமும் தேர் உற்சவத்திற்குரிய நிதியை அனுப்புவதோடு மட்டுமல்லாமல் தனது உறவினரை அனுப்பி உற்சவத்தை திறம்பட நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல இவ்வருடம் தேருக்கு வர்ணப்பூச்சுகளினாலே அலங்காரம் செய்து தேர் உற்சவம் சிறப்புற வாழ்த்திக் கொண்டி ருக்கிறார்கள். ஆகவே இந்த தேர் உற்சவத்தில் அடியவர்கள் அனைவரும் கலந்து பஞ்சமுக ஆஞ்சநேயருடைய திருவருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ வேண்டி நல்லாசி கூறுகின்றோம். குறிப்பாக திரு.அருளம்பலம் - பத்மநாதன் அவர்கள் சுவிஸ் மாநகரத்திலே இருந்து கொண்டு உபயகாரர்களை ஆலயத்தோடு இணைத்து நல்ல பணிகளை ஆற்றுகிறார்கள். அவர்களுக்கும் எங்களுடைய ஆசீர்வாதம் கிடைப்பதாக.



ஈழத்திருநாட்டின் வடதிசையில் அமைந்துள்ள குடாநாட்டில் சைவமும் தமிழும் சிறந்தோங்கும் மருதனார்மடம் எனும் ஊரில் பக்தர்களுக்கெல்லாம் எழுந்தருளியிருக்கும் பற்சுந்தர ஆஞ்ச நேயர் ஆலயத்தில் இன்று வீர ஆஞ்சநேயர் பெருமான் தேரேறி வீதியுலா வருவதையிட்டு பேரானந்தம் அடைகின்றோம். சுந்தர ஆஞ்சநேயர் பெருமான் திருவடிகளில் இன்று இந்துமத கலாசாரத்தை பேணிப்பாது காக்கும் நோக்கோடு நித்திய, நைமித்திய பூஜை களை நாம் பெருமான் சந்நிதானத்தில் கண்கூடே பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

எம்பெருமானை தரிசிக்கின்ற அடியவர்களுக்கு மனரீதியான, உடல்ரீதியான துன்பங்கள் நீங்கி அவர்கள் என்றும் பேரானந்தம் அடைய எம் பெருமான் தேரேறி பவனி வருகின்ற காட்சியே இன்று நடைபெறுகிறது. ஆஞ்சநேயர் பெருமானின் நாமத்தைக்கீழும் நாம் உச்சரித்து வந்தோமானால் இன்மை இன்றிப் போகும். இனிமை வந்து சேர்ந்து நீங்கள் எல்லா வளங்களையும் பெற்றுசீரும்சிறப்புடன்வாழ எம்பெருமான் வழியமைத்துக் கொடுப்பார். இன்று அடியவர்களின் மனங்களில் இருக்கின்ற ஆணவம் போன்ற கெட்ட சிந்தனையை அழித்து அவர்களுக்கு மனிதநேயத்தோடு மனிதம் வாழ்வ தற்கு எம்பெருமான் அருளாசி கொள்ளுவார். வாயுகுமாரா, வானரவீரா, மாருதி ருத்ரவீரா போன்ற நாமங்களோடு இன்று தேர்த்திருவிழா காணும் எம்பெருமானை வேண்டி எம்மக்களுக்கு எல்லாம் நல்லருள் பாலிக்க வேண்டி ஸ்ரீசுந்தர ஆஞ்ச நேயப்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.


Mr.Varapiragasam- Sharmilan
Senior Bancassurance Officer
LOLC- Seylan Bank, Nelliyady Branch



மலரமைப்பு:
எஸ்.ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்
செய்தியாளர்



புதிய இடத்தில் புதுப்பொலிவுடன்
உங்கள் அபிமான
New V.M.K. ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
No.80/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
TP:- 021 720 1117, 077 784 9369
V.M.K. ஜுவல்லறி கண்டி வீதி,
சாவகச்சேரி.
Opening Soon

அனைத்துவிதமான ஆடைத் தெரிவுக்கும்
நாடவேண்டிய இடம்
கீர்த்திகா
ரெக்ஸ்ரைல்ஸ்
Boys & Baby Selection
பலாலி ரோட், உரும்பிராய் சந்தி,
உரும்பிராய். 077 228 8245

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
கிளை: A9 வீதி,
வசந்தி திரையரங்கு முன்பாக,
வவுனியா. TP:- 024 222 7777,
077 710 0444
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். TP:- 021 222 4353

NARMATHA
Gold Centre & Money exchange Pvt.Ltd
நர்மதா
187,மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 222 1933
Fax : 021 222 4779
Email:narmathagc187@Gmail.com
187,Power House Road,Jaffna.

K.Sivanesan
Proprietor
KANESAN STOES
கணேசன் ஸ்ரோஸ்
Wholesale &Retail Dealers in TEXTILES
0774457344
0212222830
201 K.K.S Road,Jaffna.

ஓம் ஸ்ரீ ராமஜெயம்
சிறி சிவராம் றேடர்ஸ்
SRI SIVARAM
TRADERS
248, Hospoital Road,
Jaffna.
Tel : 0777560760
0773076917
021 2228629
189, Katheresan Street,
Colombo.
T.P.: 0777560760

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்
இராஜாமூரம்
RAJASWARIE TEXTILES
இல.105,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். TP:- 021 222 6125

VENE TRANSPORT
J.C.B. Bacco Loader
165,
K.K.S. Road,
Jaffna.
Tel:- 021 222 2046
077 908 2146

L.R.M
லீலா அரிசி ஆலை
கே.கே.எஸ். வீதி,
ஆஞ்சநேய சுவாமி கோவில்
முன்பாக,
மருதனார்மடம்.



# சிறுவர் அரங்கம்

## சுண்டெலியின் பயம்

முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் முனிவர் ஒருவரின் குடிசை இருந்தது. அதன் அருகே ஒரு சின்ன மலை இருந்தது. அந்த மலையினருகே உள்ள ஒரு துவாரத்தில் சின்ன சுண்டெலி ஒன்று வாழ்ந்து கொண்டிருந்தது. அந்தக் காட்டில் பூனையின் நடமாட்டம் அதிகம் இருந்தது. ஆகவே, அது மிகவும் பயத்துடன் வாழ்ந்து வந்தது.

ஒருநாள் ஒரு பூனையின் பிடியிலிருந்து தப்பிய சுண்டெலி, ஆஸ்ரமத்தில் உள்ள முனிவரைச் சரண் அடைந்தது. முனிவர் அதை அன்புடன் கவனித்தார்.

"பயப்படாதே!" என்று ஆறுதல் கூறினார்.

"நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.


"சுவாமி நான் பூனைகளைக் கண்டு அதிகமாகப் பயப்படுகிறேன். என்னையும் ஒரு பூனையாக மாற்றி விட்டால், நான் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?" என்றது சுண்டெலி.

முனிவர் சிற்றெலியைப் பெரும் பூனையாக மாற்றினார்.

ஒரு மாதம் சென்றது. பூனை அவர் முன் வந்து நின்றது.

"சுவாமி, பூனையாக இருப்பதிலும் பிரச்னை. ஓநாய்கள் என்னை விரட்டுகின்றன" என்றது.

பூனையின் எண்ணத்தை அறிந்து கொண்ட முனிவர் அதை ஓநாயாக மாற்றினார். ஓநாய் சந்தோஷமாகத் திரும்பிச்



சென்றது. ஒருமாதம் சென்றவுடன், மீண்டும் ஓநாய் திரும்பி வந்து முனிவரைச் சரண் அடைந்தது.

"என்ன விஷயம்?" என் "கரடிகள் தொல்லை தருகின்றன!" என்றது ஓநாய்.

அதைக் கரடியாக மாற்றி அனுப்பி வைத்தார் முனிவர்.

மீண்டும் ஒரே மாதத்தில் திரும்பியது கரடி.

"இப்போதும் பிரச்னையா?" என்று புன் சிரிப்புடன் கேட்டார் முனிவர்.

"ஆம் சிறுத்தைகள் என்னைக் கடிக்க வருகின்றன" என்றது.

"ஓஹோ!" என்ற முனிவர் அதை ஒரு சிறுத்தையாக உருமாற்றினார்.

ஒருமாதம் சென்றவுடன் சிறுத்தை திரும்பி வந்தது.

"சிங்கங்கள் என்னைக் காட்டை விட்டு வெளியேறு என்று உத்தரவிடுகின்றன" என்றது.

"காரணம்?" என்ன என்று முனிவர் கேட்டார்.

"பலசாலிகள் ஒரே காட்டில் இருக்கக் கூடாது என்பதுதான் அதன் எண்ணம்" என்றது.

முனிவர் அதைச் சிங்கமாக மாற்றினார்.

சிங்கம் ஒரு மாதம் சென்ற பிறகு, "சுவாமி, நகரத்திலிருந்து வந்த அரசன் ஒருவன், சிங்க வேட்டை ஆடினான். தப்பிப் பிழைத்தது நான் மட்டும்தான்!" என்றது.

முனிவர் சிங்கத்தை அரசனாக்கினார். அதன்பின் இரண்டு மூன்று மாதங்கள் வரை அரசன் முனிவரைப் பார்க்கவில்லை. ஆறு மாதத்துக்குப் பின் அரசன், கிழிந்த துணிமணிகளுடன் வந்து முனிவரைப் பார்த்தான்.

"என்ன ஆயிற்று உனக்கு?" என்றார் முனிவர்.

"எதிரி நாட்டு அரசன் போர் தொடுத்தான். எனக்குப்போர் செய்யவே பயமாக இருந்தது. இருப்பினும் என் சார்பாக எல்லாரும் போர் புரிந்தனர். கடைசியில் எதிரிகள் அரண்மனைக்குள் புகுந்து என்னைக் கைது செய்தனர். பாதாளச் சிறையில் அடைத்தனர். நான் தப்பி வந்து விட்டேன்" என்றான்.

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும், உனக்காக எதிரியுடன் போராட வேண்டுமா?" என்றார் முனிவர்.

அந்த அரசன் அமைதியாக இருந்தான்.

முனிவர் சொன்னார். "சிற்றெலியாக இருந்த உன்னை அரசர் வரை உயர்த்தினேன்". ஆனாலும் உன்னுள் இருந்த எலித் தன்மை மாறவில்லை. பயத்துடனே இருந்தாய்.

"இனி, நான் உனக்கு உதவுவதற்காக எது செய்தாலும், அது உனக்கு உதவவே உதவாது. இதுவரை எலியின் மனதையே பெற்றிருக்கும் நீ, இனியும் எலியாக இருப்பதே நல்லது" என்று கூறி அரசனை எலியாக மாற்றினார் முனிவர்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016
28

- 1065 - லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயம் (Westminster Abbey) திறந்து வைக்கப்பட்டது.
- 1612 - கலிலியோ கலிலி நெப்டியூன் கோளைக் கண்டுபிடித்தார்.
- 1836 - தெற்கு அவுஸ்திரேலியா, அடிலெய்ட் ஆகியன அமைக்கப்பட்டன.
- 1867 - ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவுக்கு உரிமை கோரியது.
- 1879 - ஸ்கொட்லாந்தில் டண்டீ என்ற இடத்தில் தொடருந்து மேம்பாலம் ஒன்று உடைந்து வீழ்ந்ததில் அதில் சென்றுகொண்டிருந்த தொடருந்து விபத்துக்குள்ளாகியதில் 75 பேர் கொல்லப்பட்டனர்.
- 1885 - இந்தியாவின் வழக்கறிஞர்கள், அறிவியலாளர்கள், ஊடகவியலாளர்கள் 72 பேர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை ஆரம்பிப்பதற்கு பம்பாயில் கூடினர்.
- 1891 - யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன.
- 1895 - பிரான்சின் லூமியேர சகோதரர்கள் பாரிஸ் நகரில் தங்கள் திரைப்படங்களை முதன்முதலாகப் பொதுமக்கள் பார்வைக்குக் கட்டணத்துடன் திரையிட்டனர்.
- 1908 - இத்தாலி, சிசிலியில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 75,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1929 - நியூசிலாந்தின் காலனித்துவ காவற்துறையினர் ஆயுதமின்றிப் போராட்டத்தில் ஈடுபட்ட சமோவாவின் 11 பேரைச் சுட்டுக் கொன்றனர். இது சமோவாவின் விடுதலை இயக்கத்துக்கு தூண்டுதலாக அமைந்தது.
- 1930 - மகாத்மா காந்தி பேச்சுவார்த்தைகளுக்காக பிரித்தானியா சென்றார்.
- 1981 - அமெரிக்காவின் முதலாவது சோதனைக்குழாய் குழந்தை எலிசபெத் கார் வேர்ஜீனியாவில் பிறந்தது.
- 1989 - அவுஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் நியூகாசில் நகரில் இடம்பெற்ற 5.6 அளவை நிலநடுக்கம் காரணமாக 13 பேர் கொல்லப்பட்டனர்.
- 1994 - விடுதலைப் புலிகளின் உப தலைவர்களில் ஒருவரான கோபாலசாமி மகேந்திரராஜா இந்திய அமைதிப்படையுடன் இணைந்து புலிகளுக்கெதிராக சதி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் அவருக்கு புலிகளால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1999 - இலங்கை, புங்குடுதீவில் சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்கள் (29) என்ற பெண் இலங்கைக் கடற்படையினர் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களால் கடத்தப்பட்டு பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.
- 2006 - எதியோப்பிய மற்றும் சோமாலிய அரசுத் துருப்புக்களும் சோமாலியா தலைநகர் மொகடிசுவைக் கைப்பற்றியதை அடுத்து இஸ்லாமிய போராட்ட அமைப்பின் போராளிகள் தலைநகரைக் கைவிட்டு வெளியேறினர்.
- 2007 - நேபாளத்தின் இடைக்கால நாடாளுமன்றம் நாட்டை குடியரசாக அறிவித்து மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### பிறப்புகள்

- 1932 - திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர். (இ. 2002)
- 1936 - எஸ். பாலசுப்பிரமணியன், திரைப்படத் தயாரிப்பாளர், விகடன் குழும உரிமையாளர். (இ. 2014)
- 1937 - ரத்தன் டாடா, இந்திய டாட்டா குழுமங்களின் தலைவர்.
- 1940 - அ. கு. ஆண்டனி, இந்திய அரசியல்வாதி.
- 1944 - கேரி முலிஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர்.
- 1945 - பிரேந்திரா, நேபாள மன்னர். (இ.2001)
- 1947 - நாஞ்சில் நாடன், எழுத்தாளர்.
- 1954 - டென்செல் வாஷிங்டன், அமெரிக்க நடிகர்.

### இறப்புகள்

- 1994 - கோபாலசாமி மகேந்திரராஜா, விடுதலைப் புலிகளின் முன்னாள் உப தலைவர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 100 | 70 | 30 | 40 | 40 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 90 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 110 | 160 | 120 | 200 | 200 |
| தக்காளி | 140 | 140 | 80 | 120 | 120 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 | 60 | 60 | 60 |
| கோவா | 20 | 60 | 20 | 25 | 30 | 40 | 30 |
| கரட் | 120 | 120 | 80 | 80 | 90 | 160 | 100 |
| பூசணி | 60 | 60 | 35 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 40 | 100 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 40 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 280 | 400 | 200 | 320 | 300 | 200 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 | 70 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 100 | 150 | 240 | 120 | 120 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 100 | 60 | 120 | 80 |
| கறிமிளகாய் | 300 | 100 | 150 | 200 | 200 | 240 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 100 | 300 | 300 | 400 | 300 | - |
| போஞ்சி | 140 | 160 | 80 | 120 | 140 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 20 | 30 | 20 | 40 | 30 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 30 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 250 | 350 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-40 | 50 | 35 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | 300 | 150 | 300 | 250 | 250 | 300 |
| வெங்கலப்பட்டு | 280 | 200 | — | 320 | 240 | 280 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 40 | 60 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 15 | 30 | 50 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 40 | 15 | 20 | 15 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 100 | 50 | 60 | 60 | 120 | 60 |

# பிரபல சமூக சேவையாளர் லயன் கலாநிதி நா.தனேந்திரன்(J.P) அவர்களின் மணிவிழா சிறக்க மனதார வாழ்த்தும் உள்ளங்கள்

**சேவைகளின் அடிப்படையில்...**

























விழா நாயகர் லயன் கலாநிதி நா.தனேந்திரன்

(கொட்டடி சனசமூக நிலையம்,

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம், தேசோதயம், யாழ். மாவட்டம், சமாதான நீதவான்கள் அமைப்பு, யாழ். மாவட்டம், வில்லூன்றி இந்து மயானம், யாழ். பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சிவில் பொலிஸ் குழு- J/83)

(7180)

இடம்: N.S.R. திருமண மண்டபம்
(சிறிநதியா கட்டடத் தொகுதி, ஸ்ரான்லி வீதி, வின்சர் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம்.

காலம்: 28.12.2016 புதன்கிழமை

நேரம்: பிற்பகல் 5.30 மணி

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்




மிகவும் உறுதியாக இருப்பது எந்த பலனையும் தராது...அதிக காயங்க



ளும் துன்பங்களும் வேணடுமானால் பரிசாக கிடைக்கலாம் என்பார் தென்னாபிரிக்க கலைஞர் கயோஸ். அவர் தன் எந்த வலியிலிருந்து வார்த்தைகளை எடுத்து இதை வடித்தார் என்று தெரியவில்லை. ஆனால், இந்தச் சொற்கள், ஜெயலலிதாவின் வாழ்வுக்கு மிகச் சரியாகப் பொருந்தியது. ஆம், ஜெயலலிதா தன் திரை உலக வாழ்வில் அனுபவித்த எல்லா வலிகளுக்கும் அவருடைய உறுதியான பண்புதான் காரணம். ஆனால், அதே உறுதிதான் அவர் தன் வலிகளில் இருந்து மீண்டு வரவும் உதவியது.

**ஆளுமை செய்த எம். ஜி. ஆர்... வெகுண்டெழுந்த ஜெ...!**

திரை உலகமே திரண்டிருந்த ஜெயலலிதாவின் புதுமனை புகுவிழாவுக்கு எம்.ஜி.ஆர். வரவில்லை என்று சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம் அல்லவா...? அதற்கு ஒரு காரணம் இருந்தது. ஆம், எம்.ஜி. ஆர்., தன்னை ஆளுமை செய்கிறார், தன் சுதந்திரத்தில் தலையிடுகிறார் என்று ஜெயலலிதா அப்போது நினைத்தார். அதனால் ஏற்பட்ட மன வருத்தத்தினால் தான் எம்.ஜி.ஆர்., அந்த விழாவில் பங்கேற்காமல் அதே நேரம் மனம் கேட்காமல் பரிசுப்பொருளை மட்டும் அனுப்பிவைத்தார். ஆனால், அடுத்த நாளே ஒரு சுவாரஸ்யமான சம்பவம் நிகழ்ந்தது.

ஜெயலலிதா தன் வீட்டு கிரகப்பிரவேசத்துக்கு அடுத்த நாள் , காஷ்மீரில் ஒரு திரைப்பட படப்பிடிப்பில் கலந்து கொள்ள வேண்டி இருந்தது. அதற்காக விமானத்தில் முன் பதிவும் செய்யப்பட்டு இருந்தது. ஜெயலலிதா விமானம் ஏறிய பிறகு தான் பார்த்தார். தன் இருக்கைக்கு அடுத்த இருக்கையில் எம்.ஜி.ஆர். இது ஏதேச்சையாக நடந்ததா அல்லது எம்.ஜி.ஆரின் திட்டமிட்ட ஏற்பாடா என்றெல்லாம் தெரியாது...? ஆனால், இதுதான் நிகழ்ந்தது. எம்.ஜி.ஆருக்கும் காஷ்மீரில் படப்பிடிப்பு இருந்தது. அதனால் அவரும் அதே விமானத்தில் பயணமானார். ஜெயலலிதாவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை... கடலின் மேற்புறத்தில் காதைக் கிழிக்கும் சத்தம் கேட்டாலும் ஆழ்கடலில் ஒரு அமைதி நிலவுமே...? அது போல, விமானத்தின் சிறகுகள் சத்தத்தை கடந்து இருவருக்குள்ளும் ஒரு அமைதி நிலவியது. விமானம் மேலே பறக்க பறக்க, அமைதியின் இறுக்கம் குறைந்தது. இருவரும் மீண்டும் பேசத் தொடங்கினார்கள். காஷ்மீரில் விமானம் இறங்கியபோது, முற்றாக சகஜ நிலைக்கு திரும்பினார்கள்.

காஷ்மீரில் ஜெயலலிதாவுக்கு வேறொரு இடத்தில் படப்பிடிப்பு, எம்.ஜி. ஆருக்கு வேறொரு படத்தில் படப்பிடிப்பு. ஜெ நடித்த படத்தின் கதாநாயகன் சிவாஜி. அந்த படப்பிடிப்புத் தளம், எம்.ஜி.ஆர். படத்தின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த தளத்திலிருந்து ஏறத்தாழ 60 மைல் தொலைவு. ஆனால், எம்.ஜி.ஆர். தன்னுடன் ஜெயலலிதாவை அழைத்துக் கொண்டு சென்று விட்டார். ஜெயலலிதாவால் மறுத்துப் பேச முடியவில்லை. தினமும் ஏறத்தாழ 60 மைல் அந்த பள்ளத்தாக்கு பகுதியில் பயணம் செய்து தான், ஜெ படப்பிடிப்பில் கலந்து கொண்டார். இதை ஜெயலலிதா விரும்பித் தான் செய்தாரா... அல்லது எம்.ஜி.ஆரின் வற்புறுத்தலை மீறி ஜெயாவால் எதுவும் செய்ய முடியவில்லையா என்று தெரியவில்லை. ஆனால், எம்.ஜி. ஆரின் முடிவு தான், ஜெயாவின் வழியானது. அது தான் அவருக்கு வலியாகவும் அந்த சமயத்தில் ஆனது.

தனியாக ஒரு நாடக அணியை உண்டாக்கி, ஜெயலலிதா நாட்டிய நாடகம் அரங்கேற்றிக் கொண்டிருந்தார். அந்த நாடகக் குழு மிகவும் பிரபலம் அடைந்தது. அந்த நாடகத்தை தங்கள் ஊரில் அரங்கேற்றச் சொல்லி உலகெங்கிலும் இருந்து அவருக்கு அழைப்புகள் வரத் தொடங்கியது. ஜெயலலிதாவும் இதற்கு இன்முகத்துடன் சம்மதித்தார். அதற்கான முன் பணத்தையும் பெற்றார்.

அந்த சமயத்தில், உலகத் தமிழ் மாநாடு சிங்கப்பூரில் ஒருங்கிணைக்கப்பட்டது. அந்த நிகழ்வுக்கு எம்.ஜி.ஆர். தான், சிறப்பு விருந்தினர். எம்.ஜி. ஆர்., ஜெயலலிதாவையும் தன்னுடன் உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருமாறு அழைத்தார். ஆனால், ஜெயலலிதா எனக்கு நாடக அரங்கேற்றம் இருக்கிறது. என்னால் வர முடியாது என்று மறுத்தார். ஆனால், எம்.ஜி.ஆரின் அழைப்பு கட்டளையானது. சிங்கப்பூரிலிருந்து நீ நாட்டிய அரங்கேற்றத்துக்கு செல் என்று வற்புறுத்தினார்.

இதனால் கோபமடைந்த ஜெயலலிதா, தன் மொத்த திட்டத்தையும் இரத்து செய்துவிட்டு, வாங்கிய முன்பணத்தையும் திரும்ப தந்து விட்டார். அது மட்டுமல்ல, தன் நாடக குழுவையும் இதனால் கோபமடைந்து கலைத்து விட்டார்.

ஆம்... தம் முடிவுகள் அனைத்தையும் இன்னொருவர் எடுக்கிறார் என்றால், ஒருவருக்கு கோபம் வரத் தானே செய்யும்... வெகுண்டெழுந்து



விட்டார் ஜெயலலிதா... ஆனால், இந்த கோபமும் வெகுநாட்கள் நீடிக்கவில்லை. தனக்கு யாருமே இல்லை என்று உணரும் ஒருவர், இருக்கிற ஒரு உறவையும் இழக்க துணிய மாட்டார் அல்லவா...? அத்தகைய மனநிலையில் தான் அப்போது ஜெயலலிதா இருந்திருக்கிறார். நெகிழ்ந்திருக்கிறார்.

**வாக்கு தவறாதவராக இருக்க வேண்டும்...!**

நமக்கு இப்போது மிகவும் இறுக்கமானவராக தெரிகிறார் அல்லவா ஜெயலலிதா...? ஆனால், திரைப்



படத்துறையில் உச்சத்தில் இருந்த போது இவ்வாறானவராக இல்லை. நகைச்சுவை உணர்வு அவரிடம் ததும்பி இருந்திருக்கிறது.

எழுபதுகளில் ஜெயலலிதா, " ஆனந்த விகடனில்" ஒரு கட்டுரை எழுதினார். அதில் தனக்கு நிகழ்ந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தை பகிர்ந்து இருந்தார். ஒரு ரசிகர் தொடர்ந்து ஜெயலலிதாவுக்கு கடிதமாக எழுதிக் கொண்டிருந்திருக்கிறார். ஒரு கடிதத்தில், "உங்களை திருமணம் செய்து கொள்ள விருப்பம்... இந்த திகதிக்குள் சம்மதிக்காவிட்டால் தற்கொலை செய்து கொள்வேன்..." என்று ஒரு திகதியை குறிப்பிட்டு எழுதி இருக்கிறார். ஜெயலலிதாவும் இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இது போல நிறைய கடிதம் வருகிறது. அதில் இதுவும் ஒன்று என்று கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டார். சில நாட்கள் கழித்து மீண்டும், அதே நபரிடமிருந்து கடிதம்... மீண்டும் அதே புராணம்... "உங்களை திருமணம் செய்து கொள்ள விருப்பம்... இந்த திகதிக்குள் சம்மதிக்காவிட்டால், தற்கொலை செய்து கொள்வேன்..." என்று மீண்டும் ஒரு திகதியைக் குறிப்பிடுகிறார். இப்போதும் ஜெயலலிதா கண்டு கொள்ளவில்லை.... நாட்கள் நகர்கிறது... மீண்டும் அதே நபரிடமிருந்து கடிதம் வருகிறது... "என்னை திருமணம் செய்ய சம்மதியுங்கள்.. இல்லையென்றால் தற்கொலை செய்து கொள்வேன்..." என்று.

அவருக்கு பதில் கடிதத்தை, இவ்வாறாக ஜெயலலிதா எழுதி இருக்கிறார், 'எனக்கு கணவராக வர வேண்டியவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றக் கூடியவராக இருக்க வேண்டும். மற்ற கொள்கைகளைவிட இது தான் முக்கியம்...சொன்ன வாக்கை மீண்டும் மீண்டும் மீறும் உங்களை எப்படி நான் மணக்க முடியும்...?"

ஆம்... அப்போது இது தான் ஜெயலலிதா...!

(தொடரும்)

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதயபூர்வமாகவும் செய்யப்பட்டவையே. *~ ஜேம்ஸ் ஆலன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாணத்தில் நிர்வாகப் பஞ்சம் கடுமை

தமிழர்களின் அரசியல் என்பது இன்று பொழுது போக்குக்காகப் பேசப்படும் விடயமாக மாறிவிட்டது.

ஒரு காலத்தில் உணர்வுபூர்வமாக, எங்களின் சொந்த விடயமாக, உள்ளுணர்வுடன் பேசப்பட்ட அதே அரசியல் விடயம் இன்று நலினப்பட்டு நேரம் கிடைக்கும்போது மேலோட்டமாகப் பேசப்படுவதாயிற்று.

எதிர்காலத்தில் இதன் நிலைமை எப்படியாகும் என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

இருந்தும் எம்மினத்துக்கு செய்யப்படுகின்ற வஞ்சகத்தனத்தை தமிழ்ப் பற்றுக் கொண்ட ஒரு பகுதியினரால் ஜீரணிக்கவே முடியவில்லை.

எங்கள் அரசியல் எவ்வாறாகும்? தீர்வு எப்படி அமையும்? எங்களை ஏமாற்றிவிடப் போகிறார்களோ? எங்கள் இனத்தின் எதிர்காலமும் எங்களுக்கான எதிர்கால அரசியல் தலைமையும் எப்படியாகும்? என்ற ஏக்கத்துடன் தான் அவர்களுக்கான பகல்பொழுது விடிகிறது.

சிலவேளைகளில் இவர்களுக்கு மட்டும் ஏன்? இந்த அக்கறைப்பாடு என்று மற்றவர்கள் கேட்டால், அது தானே என்று இவர்களால் நினைக்க முடியுமே அன்றி இவர்களால் தமிழினத்தின் மீதான பற்றை பிரித்துவிட முடிவதில்லை.

இதன்காரணமாக எந்நாளும் நம் தமிழினம்; நம் தமிழ் மொழி என்ற நிலனப்புக்களோடு வாழ்வதே இவர்களின் விதியாயிற்று.

இது ஒருபுறம் இருக்க, எங்களிடம் இருக்கக்கூடிய மிப்பெரிய பலவீனம் நிர்வாகத் திறன் இன்மையாகும்.

நிர்வாகத் திறன் என்ற விடயம் எங்களிடம் உன்னதமாக இருந்திருக்குமாயின் எங்கள் வடபுலத்தில் எங்களால் நிறைய சாதனைகள், முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்க முடியும்.

ஆனால் நாம் இன்று வரைப் பேசுவது சிங்கள ஆட்சியாளர்கள் தராததையே அன்றி எங்களால் செய்யக்கூடியவை பற்றி அல்ல என்பதுதான் உண்மையானது.. இதற்குக் காரணம் எங்களிடம் நிர்வாகத் திறமை இல்லாமையே.

பொதுவில் வடக்கு மாகாண நிர்வாகப் பரப்புக்களில் நிர்வாகக் குறைபாடுகள் நிறையவே உள்ளன.

குறித்த நிர்வாகக் கட்டமைப்புக்கு உட்பட்ட நிர்வாகிகள் தங்கள் கடமை விடயங்களில் ஒரு அசமந்தப் போக்கைக் கொண்டுள்ளனர் என்பதற்கு அப்பால்; பழி தீர்த்தல் – காலம் கடத்துதல் – விரைவாக ஏன் செய்ய வேண்டும் என்ற நினைப்புக்கள் – மக்களுக்கு உதவ வேண்டும் என்ற மனோநிலை அறவே இல்லாமை – எதற்கும் சட்டத்துடன் ஒட்டிக் கொண்டிருத்தல் – தனது சக உத்தியோகத்தர்களை மதியாமை அல்லது எவர் மீதும் சந்தேகம் கொள்ளுதல் – இயல்பிலேயே நிர்வாகத் திறமை இல்லாமை போன்றவை காரணமாக எங்கள் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட அரச பொது அமைப்புக்களின் வினைத்திறனும் விளைதிறனும் மந்தமாகவே உள்ளன.

இத்தகைய நிலைமை முழுமையானதன்று. எத்தனையோ அதிகாரிகள் பணியாளர்கள் சிறப்புடன் செயற்படுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

உதாரணத்துக்கு யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். யாழ்.போதனா வைத்தியசாலையின் தற்போதைய பணிப்பாளரின் நிர்வாகத் திறனை அந்த வைத்தியசாலை வளாகம் சொல்லி நிற்கிறது. இது போன்று வேறு சில அமைப்புக்களிலும் அதிகாரிகளின் நிர்வாகத்திறன் பளிச்சிடுகின்றன.

ஆனால் பெரும்பாலான அமைப்புக்களில் நிர்வாக மந்தம் மிக மோசமாக உள்ளமை மறுக்க முடியாத உண்மை.

இத்தகைய மந்த நிலைமை சிங்கள அதிகாரிகள், சிங்கள உத்தியோகத்தர்கள் என்றால் இப்படிச் செய்யமாட்டார்கள் என்று நம் தமிழ் மக்கள் கூறுமளவுக்கு நிலைமையைக் கொண்டு வந்துள்ளது. எனவே எங்களின் பலவீனம் என்பது எம் இனத்துக்கு பாதகமானது.

ஆக, எங்களை நாம் வளப்படுத்த வேண்டும். சேவை, மனித நேயம், உதவுகின்ற மனநிலை, மற்றவர்களை மதிக்கின்ற பக்குவம் இவற்றை உணர்த்தும் போது எங்களால் எங்களுக்கு ஆகவேண்டியது சிறப்பாக ஆகும். இது பற்றி நாம் கவனம் செலுத்துவது கட்டாயம்.

# தரிசு நிலங்கள் தென்னந்தோப்புகளாக மாற வேண்டும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் விருப்பம்

(யாழ்ப்பாணம்)

எமது பகுதியிலுள்ள தரிசு நிலங்கள் அனைத்தும் தென்னந்தோப்புகளாக மாற்றப்பட வேண்டும். அதற்கு தென்னை அபவிருத்தி சபை மற்றும் பொது மகள் முன்வர வேண்டும்என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண தெனனை அபிவிருத்திச் சபையின் மானியக் கொடுப்பனவு வழங்கல் நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

தென்னையின் முக்கியத்துவம் ஔவையாரின் காலத்திலேயே உணரப்பட்டிருந்தது. இதனால்தானோ என்னவோ முன்னைய காலத்தில் கூடுதலான செல்வந்தர்களும் பணம் படைத்தவர்களும் தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பகுதிகளில் ஏக்கர் கணக்கான தரிசு நிலங்களை வாங்கி அவற்றில் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு தமது வருவாயை வளப்படுத்திக் கொண்டனர்.

அப்பகுதியில் சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் பல தென்ன்ன மரங்கள் இருக்கின்றன. அவர்களின் வீட்டுச் செலவுக்கும் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கும் இத் தென்னை மரங்கள் மூலம் கிடைக்கின்ற வருவாய் மிகவும் போதுமானதாக இருக்கும்.

ஆனால் கடந்த காலத்தில் ஏற்பட்ட கடுமையான யுத்தங்களின் போது எறிகணைத் தாக்குதல்கள் வருமானந் தரக்கூடிய அனைத்துப் பயிர்களையுஞ் சிரச்சேதம் செய்தது மட்டுமன்றி அவற்றிலிருந்து வருமானத்தை நம்பியிருந்த ஆயிரக் கணக்கான குடும்பங்களை ஏதிலிகளாக மாற்றியது. அம் மக்கள் வருமானத்தை இழந்து குடும்பத்தை எவ்வாறு கொண்டு செல்வது என்று வகை தெரியாமல் இன்னமும் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் என்பது வெறு மனே துப்பாக்கிச் சூடும் செல்தாக்குதலுமாக இருக்கவில்லை. பொருளாதார ரீதியாக நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டோம். பல பாரிய தென்னை மரத் தோட்டங்களும் ஏனைய வீட்டு வாசல்களில் காணப்பட்ட தென்னை மரங்களும் அடியோடு அழிக்கப்பட்டன. தென்மராட்சிப் பகுதி ஒரு சூனியப் பிரதேசமாக அல்லது கட்டாந்தரையாக ஆக்கப்பட்டது.

இவ்வாறான பாதிப்புக்களுக்கு ஆளாகிய மக்களுக்கு உதவுவதற்காகவே தென்னை பயிர்ச்செய்கை சபை மானிய உதவிகளையும் தென்னை மரக்கன்றுகள், அவற்றிற்கான உர வகைகள், மருந்துகள், விவசாய அறிவுறுத்தல்கள் ஆகிய அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றது. மீண்டும் இந் நிலங்களில் தென்னை மரச் சோலைகளை உருவாக்கி வருவாயைப் பெருக்குவதற்கு முயலுகின்றது.

இவ் வேளையில் அவர்களின் முயற்சிக்கு உறுதுணையாகவும் உந்து சக்தியாகவும் நாமும் எமது சக்திக்கு ஏற்ற வகையில் உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும். முடியுமானவரை தென்னைகளை மீள நாட்ட முன்வர வேண்டும்.

காணியுள்ள ஒவ்வொரு வீட்டிலும் உருவாக்கப்படுகின்ற குறைந்த பட்சம் ஐம்பது தென்னை மரங்கள் முறையாக பராமரிக்கப்படின் குறிப்பிட்ட 5 வருட காலப்பகுதியில் தாழுண்ட நீரைத் தலையாலே தருவதற்குத் தென்னைகள் தயாராகி விடுகின்றன.

இன்று யுத்தம் முடிவுற்று 7 வருடாங்கள் முடிவடைந்து விட்டன. பலரின் காணிகள் விடுவிக்கப்பட்டு 5 அல்லது 6 வருடாங்களுக்கு மேற்பட்ட போதும் அவற்றில் இதுவரை எந்தவித பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளாது அவை தரிசு நிலங்களாக காணப்படுவது வேதனைக்குரியது.

நீண்டகால இடப்பெயர்வு அவர்களை தூர இடங்களில் குடியமரச் செய்துவிட்டதால் அவர்கள் தமது பாரம்பரிய காணிகளில் வந்து குடியிருக்கவோ அல்லது பயிர்ச் செய்கைகளில் ஈடுபடவோ பின்னிற்கின்றார்கள். பலரின் முதுமையும் அவர்களைப் பின்னிற்க வைக்கின்றன.

இப் பேர்ப்பட்ட காணி உரித்தாளர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் காணிகளை தென்னைப் பயிர்ச் செய்கை சபை குத்தகைக்கு எடுத்து அவற்றை வளப்படுத்த தென்னை அபிவிருத்தி சபை முன்வர வேண்டும்.

அன்றைய கிராமிய வாழ்க்கை முறைமை எளிமையானதாக அமைந்திருந்தது. அன்று அவர்களிடையே போட்டி இல்லை, பொறாமை இல்லை, மிகப் பெரிய பணச்செலவு அதாவது ஆடம்பரச் செலவு இல்லை. குறுகிய வருமானத்தில் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

ஆனால் யுத்தத்தால் ஏற்பட்ட தாக்கம் அவர்களை நகர்ப்புறம் நோக்கி நகரச் செய்தது. பொழுது போக்குச் சாதனங்கள் மற்றும் இன்னோரன்ன வசதிகள் அவர்களை நகர்ப்புறங்களில் வரவேற்றன. இவை அவர்களை மீண்டும் கிராமத்திற்கு செல்லவிடாது தடுக்கின்றன.

விட்டுச் சென்றவர்கள் கிராமங்களுக்கு வந்து பயனுள்ள அமைதி வாழ்க்கையை வாழுங்கள் என்று நாங்கள் அவர்களிடம் கோரிக்கை விடுகின்றோம்.

ஆனால் அவர்கள் கிராமத்திற்கு வந்தால் என்ன, வரா விட்டால் என்ன இங்குள்ள தரிசு நிலங்கள் அனைத்தும் தென்னந்தோப்புக்களாக மாற்றப்பட வேண்டும்.

அவற்றிற்கு தென்னை அபிவிருத்தி சபையும் அவ்வப் பகுதி பிர தேச செயலர்கள், கிராம உத் தியோகத்தர்கள் ஆகியோரும் வேண்டிய உதவிகளை எம் மக்களுக்கு வழங்க வேண் டும்.

எம்மக்களின் பயிர்ச் செய்கை ஊக்குவிக்கப்படல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கலைஞானி நினைவுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

கலைஞானி அ.செல்வரத்தினத்தின் 15 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கந்தர்மடம் சிவகுருநாத பீடத்தில் நடைபெறும். (இ-7)

## மாநகரசபையின் ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பாசையூரில் அமைந்துள்ள மாநகரசபையின் ஆரம்ப சுகாதார நிலையம் IOC நிறுவனத்தினால் புனரமைப்பு செய்யப்பட்டு மாநகரசபை ஆணையாளர் பொ. வாகீசன் தலைமையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், யாழ. இந்தியத் துாதுவர் ஏ.நடராஜன் மற்றும் IOC நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சியாம் ஆகியோரால் திறந்து வைககப்பட்டு அப்பகுதி மக்களுக்கு சேவையாற்றுவதற்கென கையளிக்கப்படவுள்ளது. (இ)

## சிவலிங்கேஸ்வர சுவாமியின் அருளுரையும் ஆசிகளும் இன்று

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து வருகை தரும் காமாட்சிபுர ஆதீன கோயம்புத்தூர் குரு முதல்வர் சாப்தசிறி சிவலிங்கேஸ்வர சுவாமி இன்று 28 ஆம் திகதி யாழ்ப்பாணம் நகுலேஸ்வரம் குழந் தைவேல் சுவாமிகளின் சிவாலயத்தில் காலை 9 மணி முதல் அருளுரையும் ஆசிகளையும் வழங்கவுள்ளார்.

இந்த இறையாசி நிகழ்வில சிவதொண்டர்கள், மெயயடியார்கள், அடியார்கள், அறநெறி ஆசிரியர்கள், அறநெறி மாணவர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சுவாமி களுடைய அருளாசிகளை பெற்றேகுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

## கல்விமாணி பட்டக் கற்கைநெறி 2011/ 2013 அணி நிறைவுவிழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் நெல்லியடி மத்திய கல்லூரி கற்கை நிலையத்தின் கல்விமாணி பட்டக் கற்கை நெறி 2011/ 2013 கல்வியாண்டில் பயின்று பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக்கான நிறைவு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல் லியடி மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் திருமதி செல் வராணி இளங்கோ கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### தூய பக்தியால் இறைவனைக் காணலாம்



✦ உண்மை ஒன்றைச் சொல்கிறேன். கேளுங்கள். நீங்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால, அதற்கிடையில் உங்கள் மனதை இறைவன்பால் திருப்ப வேண்டும். இல்லையேல் உஙகள் வாழ்வு அனர்த்தமாய் போய்விடும்.

✦ சேற்றுமீன் சேற்றில் புதையுண்டு கிடந்தாலும் அதன் மீது சேறு படிவது கிடையாது. அதே போல், மனிதன் உலகில் வாழ்ந்தாலும், அவன் உலகப் பற்றில் தோய்ந்து விடக்கூடாது.

✦ மனிதன் பந்தங்களில் சிக்கிக் கிடக்கிறான். குரு கடாட்சமின்றி இப்பந்தங்களில் இருந்து மனிதன் விடுதலை பெற முடியாது.

✦ ஈரப்பதம் கொண்டுள்ள தீக்குச்சியை எவ்வளவு தான் உரசினாலும் தீப்பற்றாது. உலர்ந்த குச்சி உரசிய அளவிலேயே பற்றிவிடும். ஒருவனுடைய உள்ளத்தில் சிறிதளவு உலக ஆசை இருக்குமானாலும், அவனுக்கு இறையருள் கிடைக்காது.

✦ பிரதிபலன் எதிர்பார்க்காத தூய்மையான அன்பினை சிலரிடத்தில் மட்டுமே காணமுடியும். பிரகலாதனிடம் அத்தகைய தூயபக்தி இருந்தது. அதனால் தான் பெருமாள் நரசிம்ம வடிவில் அவன் அழைத்தவுடனேயே தூணில் இருந்து வெளிப்பட்டார். அப்படிப்பட்டவர்கள் மிகவும் பாக்யவான்கள்.

✦ கசிந்துருகி பக்தி நாட்டம் கொள்வது விடியற்காலை நேரம் போன்றது. விடியலைத் தொடர்ந்து சூரியோதயம் உண்டாகிறது. அருள் நாட்டத்தைத் தொடர்ந்து இறைக் காட்சி உண்டாகும்.

## காந்தியூர் இளம்பிறை வி. கழகம் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது



குரும்பகட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் மாதனை விளையாட்டுக்கழகத்தையும் தீபஜோதி விளையரட்டுக்கழகத்தையும் வீழ்த்தி காந்தியூர் இளம்பிறை விளையாட்டுக்கழகம் அரையிறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. (கு)

## FA கிண்ண உதைபந்தாட்ட தொடர் மயிலங்காடு ஞானமுருகன் வெற்றி



யாழ். லீக் அணிகளுக்கிடையிலான FA கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது ஞானமுருகன் அணி. அணி சார்பாக தீபன் , கனுஜன் தலா ஒரு கோலினைப் போட்டனர். (கு)

# குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டி

## சிவாநந்தா வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்டத்தின் லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான "அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்" ஞாபகார்த்த மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 26.12. 2016 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் அல்வாய் நண்பர்கள் வி.கழக "பி"அணி, பருத்தித்துறை சிவாநந்தா வி.கழக அணியை எதிர்கொண்டது.

சுறுசுறுப்பையும் வேகத்தையும் போட்டி ஆரம்பித்த வுடனேயே அல்வாய் நண்பர்கள் அணி காட்டத் தொடங்கியது. இதனால் 6 ஆவது நிமிடத்தில் அல்வாய் நண்பர்கள் அணியின் முன்கள 13ஆம் இலக்க வீரர் எஸ். சுதர்சன் தனது அணிக்காக எதிர் அணியின் பலத்த தற்காப்பையும் தகர்த்து ஒரு கோலை அடித்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

இருப்பினும் சீறியெழுந்த சிவாநந்தா முன்னேறி தாக்கும் ஆட்டத்தை கையாண்டது. இதனால் அந்த அணியின் முன்கள 5 ஆம் இலக்க வீரர் எஸ்.சுஜந்தன் 8ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

10 ஆவது நிமிடத்தில் சிவாநந்தா அணியின் தற்காப்பு வீரர் தண்டப் பரப்புக்குள் வேண்டும் என்றே பந்தைக் கையால்" கையாண்டமைக்காக 'எதிரணிக்கு தண்ட உதை வழங்கப்பட்டது.

இதனை சாதுரியமாக பயன்படுத்திய அல்வாய் நண்பர்கள் அணியின் 13ஆம் இலக்க வீரர் எஸ்.சுதர்சன் தனது அணிக்காக இரண்டாவது கோலையும் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்தும் முனைப்புடன் விளையாடிய அந்த அணியின் முன்கள 9ஆம் இலக்க வீரர் என்.நஜீத் 14 ஆவது நிமிடத்தில் தனது அணிக்காக ஒருகோலைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடந்து சிவாநந்தா அணி எதிரணியின் கோல் பிராந்தியத்தை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர். இதனால் 19 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்கள 6ஆம் இலக்க -வீரர் (லங்கா என அனைவராலும் செல்லமாக அழைக்கப்படும்) இலங்கேஸ்வரன் தனது அணிக்காக ஒருகோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இருப்பினும் 3 கோல்களைப் பெற்றதனால் அல்வாய் நண்பர்கள் "பி"அணியின் ஆதிக்கத்துடன் 4.36 மணிக்கு முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

4.41 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்தில் சிவாநந்தா அணி வேகமாக முன்னேறி தாக்குதல் ஆட்டத்தை கையாண்டது. இதனை சமாளிக்க முடியாது அல்வாய் நண்பர்கள் அணிசரிந்தேபோனது. இதனை சாதகமாகவும் சாதுரியமாகவும் பயன்படுத்திய சிவாநந்தா அணி கோல்களை போடத்தொடங்கியது. இதனால் 27 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் முன்கள 12 இலக்க வீரர் கீ.சுபாஸ்கரன் தனது அணிக்காக ஒரு கோலை அடித்து தனது அணியை கோல்கணக்கில் எதரணியுடன் சமப்படுத்தினார்.

பின்னர் சிவாநந்தா அணியின் முன்கள 5 ஆம் இலக்க வீரர் எஸ்.சுஜந்தன் 28ஆவது, 33 ஆவது நிமிடங்களில் தனது அணிக்காக அடுத்தடுத்து இருகோல்களைப் பெற்றுக்கொடுத்து தனது அணியை வெற்றியின் பக்கம் தூக்கி நிறுத்தினார்.

தொடர்ந்தும் அல்வாய் நண்பர்கள் அணி தனது வீரர்களை மாற்றி தாம் எப்படியாவது கோல்களைப் பெற்று தொடரில் தமது இடத்தை தக்கவைக்க போராடிக்கொண்டிருந்தது. ஆனாலும் அவர்களது முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இருப்பினும் 39 ஆவது நிமிடத்தில் சிவாநந்தா அணியின் 9 ஆம் இலக்க-வீரர் கெ.ரஜீப் தனது அணிக்காக ஒருகோலைப் பெற்றுக்கொடுத்தார்.

இறுதியாக போட்டி 5.02 மணிக்கு முடிவுக்கு வரும் போது சிவாநந்தா அணி 6 கோல்களை போட்டு வெற்றி பெற்று தொடரில் தனது இடத்தை தக்கவைத்துக்கொள்ள அல்வாய் நண்பர்கள் "பி" அணி, 3 கோல்களை மட்டும் பெற்றதனால் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியது

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக சிவாநந்தா வி. கழக அணியின் முன்கள 5 இலக்க வீரர் எஸ்.சுஜந்தன் தெரிவுசெய்யப்பட்டார். (கு)

## டாம்லாதம் சதம் நியூசிலாந்து வெற்றி



நியூசிலாந்து -- பங்காளதேஷ் அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்காளதேஷை வீழ்த்தியது.

நியூசிலாந்து - பங்காளதேஷ் அணிகள் மோதும் முதல் ஒருநாள் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலில் விளையாடிய நியூசிலாந்து 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 341 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க வீரர் டாம்லாதம் சதம் அடித்தார். அவர் 121 பந்தில் 137 ஓட்டமும் (7 பவுண்டரி, 4 சிக்சர்) கோலின் முனரோ 61 பந்தில் 87 ஓட்டமும் (8 பவுண்டரி, 4 சிக்சர்) எடுத்தனர்.

பின்னர் விளையாடிய பங்காளதேஷ் 264 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் நியூசிலாந்து அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் 31 ஓட்டமும் எடுத்ததன் மூலம் நியூசிலாந்து கப்டன் வில்லியம்சன் 4 ஆயிரம் ஓட்டத்தைக் கடந்தார். இந்த ஓட்டத்தை வேகமாக கடந்த (96ஆவது இன்னிங்ஸ்) 5 ஆவது வீரர் என்ற சாதனையை அவர் பெற்றார். அம்லா (தென்னாபிரிக்கா) 4 ஆயிரம் ஓட்டங்களை 81 ஆட்டத்தில் கடந்து முதல் இடத்தில் உள்ளார். (கு)

## மீண்டும் தந்தையானார் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின்

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின்-பிரீத்தி தம்பதிக்கு கடந்த 21 ஆம் திகதி அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது.


இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின்-பிரீத்தி தம்பதிக்கு ஏற்கனவே ஒன்றரை வயதில் பெண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் மீண்டும் கர்ப்பமடைந்த பிரீத்திக்கு கடந்த 21 ஆம் திகதி அழகான பெண்குழந்தைபிறந்தது.

குழந்தை பிறந்த தகவலை 5 நாட்களுக்கு பிறகு நேற்று முன்தினம் தான் பிரீத்தி டுவிட்டரில் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரை இந்திய அணி 4:0 என்ற கணக்கில் வென்று சாதனை படைத்த மறுநாள் குழந்தை பிறந்துள்ளது.

உடனடியாக அஸ்வின், ஐ.சி.சி. சார்பில் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக



தேர்வு செய்யப்பட்டார். இது போன்ற மகிழ்ச்சியான தருணங்களை எல்லாம் ரசிகர்கள் சில நாட்கள் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்த தகவலை தாமதமாக வெளியிட்டதாக பிரீத்தி குறிப்பிட்டுள்ளார். (கு)

## பிக்கப்-பாரவூர்தி...

வவுனியா ஈரப்பெரியகுளத்திற்கு அண்மித்த நாவற்குளம் பகுதியில் நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் வைத்தியர் உட்பட மூவர் பலியாகியுள்ளதுடன், மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான பிக்கப் ரக வாகனமும் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பாரவூர்தியும் (கன்ரைனர்) நேருக்கு நேர் மோதியுள்ளன.

புத்தளம் வைத்தியசாலையில் வைத்தியராக பணியாற்றும் ரி.எம்.ஏ.சுதேசிகா, அவரது கணவரான முகமது சபூர், மாமனாரான (கணவரின் தந்தை) வவுனியாவின் பிரபல வர்த்தகர் சப்ரின் (வயது58), அவரது மனைவி மலீனா(வயது53)ஆகியோர் பயணித்த வாகனம் இந்த விபத்தில் சிக்கியுள்ளது.

இந்தக் கோர விபத்தில் பெண் வைத்தியர் மற்றும் அவரது மாமன், மாமி ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவரது கணவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் வவுனியா பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பாரவூர்தியின் சாரதியை கைதுசெய்துள்ள மதவாச்சி பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த ஒக்டோபர் மாதம் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சுகாதார திணைக்களத்தின் வாகனம், கனரக வாகனமொன்றுடன் மோதியதில பெண் வைத்தியர் உள்ளிட்ட இருவர் பலியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-15-250)

## முன்னாள் பிரதம...

முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்க சுகயீனம் காரணமாக கடந்த சில நாட்களாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி காலமானார். அவருக்கு வயது 83.

கடந்த 1933 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி பிறந்த இவர் இலங்கையின் 14 ஆவது பிரதமராக பதவியேற்று பணியாற்றியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மூத்த உறுப்பினரான இவர் கடந்த 1960 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

1962 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில்இணைந்து கொண்ட இவர் ஹொரனை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு மீண்டும் 1965 ஆம் ஆண்டு மற்றும் 1970ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் களுத்துறை மாவட்டத்தில் மீண்டும் போட்டியிட்ட அவர் 2000ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் வரையும் 2005 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையும் பிரதமராக பணியாற்றியிருந்தார்.

தனது இறுதிக் காலப்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசகராகவும் இவர் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சமஷ்டி தீர்வுக்கு...

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையும் அரசியல் யாப்பு ரீதியிலான எந்தவொரு மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளப் போவது இல்லையென சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் யாப்பில் எமது நாட்டின் ஒற்றையாட்சிக்கும், சிறுபான்மையின மதத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ள பௌத்த மதத்திற்கான முன்னுரிமை அளித்து வழங்கப்பட்டுள்ள இடத்திற்கும் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த இடமளிக்கமாட்டோம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை காணப்படுவதாலேயே 13ஆவது திருத்தத்தை யாப்பில் உள்ளடக்க உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

நாடு பிளவடைவதை தடுக்கவும், இரண்டு மாகாண சபைகள் ஒன்றிணைந்து தனி இராச்சியம் ஒன்றை உருவாக்குவதை தடுப்பது தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். ஐக்கிய இலங்கைக்குள் சுயாதீனம் மற்றும் இறையாண்மையை பாதிக்கும் சமஷ்டி தீர்விற்கு செல்ல, நாட்டில் இன்னுமொரு நாடு உருவாக, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையும் மாற்றத்தை ஏற்படுத்த நாம் ஒருபோதும் இடமளிக்கப்போவது இல்லை எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் புதிய தேர்தல் முறைமையிலேயே நடைபெறுமெனவும் அதற்கு தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், அமைச்சர் எஸ்.பி இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டார்.

தொகுதிவாரியான தேர்தல் முறையிலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தீர்மானித்துள்ளோம். அதில் சிறிதளவில் விகிதாசார பிரதிநிதித்துவத்தை சேர்த்துக் கொள்வது தொடர்பிலும் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதில் எவ்வித மாற்றமும் இல்லை. இரண்டு பிரதான கட்சிகளும் இதற்கு இணங்கியுள்ளன. உள்ளூராட்சி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களை புதிய முறையிலேயே நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முழுமையான அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், பெரும்பான்மையானவர்கள் தொகுதிவாரி முறையிலும் சிறு பகுதியினர் விகிதாசார அடிப்படையிலும் தெரிவாகும் வகையிலான புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தும் 20ஆவது யாப்பு திருத்தத்தை நிறைவேற்ற எதிர்பார்க்கின்றோம் என்றார். (செ-11)

## சீனாவுக்கு காணி...

அங்கு மேலும் கருத்து வெளியிட்ட ஜீ.எல்.பீரிஸ்,

"சுஜீவ சேனசிங்க சர்வதேச வர்த்தகம் தொடர்பிலான இராஜாங்க அமைச்சர். ஆனால் அம்பாந்தோட்டையில் 15ஆயிரம் ஏக்கரை சீனாவுக்கு வழங்குவது தொடர்பிலான மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய வேலைத்திட்டம் தொடர்பில் அவருக்கு எதுவித விடயமும் தெரியாதாம். அந்த விடயம் தனக்குத் தெரியாமல் இரகசியமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்கிறார். அதாவது, இங்கு நடைபெறுவதாவது. அரசுக்குள் ஒரு அரசாகும்.

அம்பாந்தோட்டை காணிக்கனக்கு வழங்கானது அரசு கூடி எடுத்த தீர்மானமல்ல மாறாக பிரதமரின் விசுவாசிகள் ஒரு சிலர் கூடி எடுத்த தீர்மானமாகும்.

அதேவேளை, இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க இரண்டு சீன நிறுவனங்கள் கோரிக்கைவிடுத்தன. அதில் ஒரு நிறுவனமான சீனா ஆபர் நிறுவனத்தின் ஒப்பந்தம் எமது நாட்டுக்கு அதிகமான வருமானத்தை ஈட்டிதரும் வகையிலும், எமக்குச் சாதகமானதாகவும் அமைந்திருந்தது. ஆனால், அந்நிறுவனத்துடன் அரசு ஒப்பந்தத்தை கைச்சாத்திடவில்லை. மாறாக இலாபத்தில் 80வீதமான பங்கை எடுத்துக்கொள்வோம் எனக் கூறும் நிறுவனத்துடனே ஒப்பந்தத்தை கைச்சாத்திடவுள்ளது.

அதுவும் ஓர் இரு ஆண்டுகள் அல்ல 99 வருடங்களுக்கு ஒப்பந்தம் கைசாத்திடப்படவுள்ளது. உலகில் எங்காவது இவ்வாறான ஒரு அரசு உள்ளதா? இங்கு தெளிவாக விளங்குவதாவது, மேசைக்கு அடியில் பாரிய அளவிலான பணம் கைமாறப்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே குறித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்குவதற்கு சிலர் மும்முரமாகச் செயற்படுகின்றனர்.

இதன்மூலம் அம்பாந்தோட்டையில் நாட்டிற்குள் நாடொன்று உருவாகுவது உறுதியாகியுள்ளது. இப்படிக்குறிப்பிடக் காரணம் குறித்த 15ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பின் பாதுகாப்பையும் அந்நிறுவனத்திடமே அரசாங்கம் ஒப்படைக்கப்படவுள்ளது எனவும் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டார். (செ-11)

## துப்பாக்கிச் சூடு...

துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

4ஆம் கட்டை பகுதியை சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும், இதனபோது மேலும், இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, சடலம் கந்தளாய் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற கொண்டு வருகின்றனர். (செ-11)

## அதி உச்ச அதிகா...

செயற்பட அரசாங்கம் தீர்மானித்ததே தவிர அக்கட்சியுடன் இரகசிய உடன்படிக்கைகளை மேற்கொண்டு ஆட்சியை பலப்படுத்த வேண்டிய அவசியம் இல்லையென தெரிவித்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க,

அதியுச்ச அதிகார பகிர்வு என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை நாம் தோற்கடிப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி இரகசிய உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளது என பொது எதிரணி தெரிவித்துள்ள நிலையில் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் முன்னணியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் ஊடகங்கள் நேற்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## பழுதடைந்த 2880 டின்மீன்கள் மீட்பு

(கொழும்பு)

பழுதடைந்த நிலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 2 ஆயிரத்து 880 டின்மீன்கள் நுகர்வோர் அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு 15 பெர்கியுசன் வீதியில் உள்ள களஞ்சியசாலையில் இருந்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த டின்மீன்கள் 120 பெட்டிகளில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இதன் உற்பத்தி திகதிகள் என்பன மாற்றப்பட்டு இவற்றுக்கு புதிய லேபல்கள் ஒட்டப்பட்டிருந்தாகவும் நுகர்வோர் அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த களஞ்சியசாலையின் உரிமையாளருக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையினர் வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-10)

## வடக்கு - கிழக்கு பகுதிகளில் மழை இன்னும் சில தினங்களுக்கு நீடிக்கும்

(தும்பங்கேணி)

இவ் வருடம் பருவ மழை விவசாயிகளின் தேவைக்கேற்றவாறு பெய்யாததால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற் பட்ட விவசாய நிலங்கள் நீரின்றி அழிந்துள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வரட்சி நிலை இவ்வாறு இருக்கையில், நேற்று அதிகாலையில் திடீரென மட்டக்களப்பில் பெரும் இடியுடன் கூடிய மழை பெய்தது. இம்மழை பகல் வேளையிலும் இடையிடையே பெய்தது.

நேற்று காலை 8.30 மணியுடன் கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக் கூடிய மழைவீழ்ச்சி பாசிக்குடாவில் பதிவாகியுள்ளது.

அந்த வகையில் மட்டக்களப்பு நகர் பகுதியில் 56.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நவகிரிப் பகுதியில் 12.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், தும்பங்கேணிப் பகுதியில் 5.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், மைலம்பாவெளிப் பகுதியில் 34.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பாசிக்குடாப் பகுதியில் 76.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உன்னிச்சைப் பகுதியில் 4.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வாகனேரிப் பகுதியில் 75.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வாகரைக் கட்டு முறிவு பகுதியில் 19.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், உறுகாமம் பகுதியில் 12.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி கே.சூரியகுமாரன்நேற்று காலை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் சில நாட்களுக்கு மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இப்பருவ மழை உரிய காலத்தில் பெய்யாததால் விவசாயிகள் பாதிப்பையே எதிர்கொண்டுள்ளனர். தற்போது பெய்த மழையினால் வரட்சியிலிருந்து மீதியாக தப்பிப் பிழைத்திருக்கும் விவசாய நிலங்களுக்கு உயிர் கொடுத்தாற் போலமைந்துள்ளது என்பது உண்மை. இருப்பினும் இவ்வாறான மழை தொடர்ந்தும் தேவையென விவசாயிகள் எதிர்பார்த்திருக்கின்றனர். (5)

## மரண அறிவித்தல்



### திருமதி இராமுப்பிள்ளை தங்கம்மா

சங்கானை நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை தங்கம்மா நேற்று (27.12.2016) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் இராமுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், செல்வரத்தினம், செல்லம்மா, கனகம்மா, செல்வராணி ஆகியோரின் சகோதரியும், கமலாதேவி, தவேந்திராதேவி, இந்திரதேவன், ஜெகதேவன், வசந்தி ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.12.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : பிள்ளைகள்

## ரயிலில் வெடி...

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணிக்கவிருந்த தபால் ரயிலில் வெடி குண்டு இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று முன்தினம் இரவு ரயில் இரண்டரை மணித்தியாலங்கள் தாமதமாகியதாக ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

ரயிலில் குண்டுப் பொதியொன்று இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தவுடன், இரவு 8 மணிக்கு ரயிலில் இருந்த சகல பயணிகளும் இறக்கப்பட்டு, விசேட அதிரடிப் படைப் பிரிவின் உதவியுடன் பொலிஸார் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இருப்பினும், எந்தவித சந்தேகத்திற்கிடமான பார்சல்களும் காணப்படாமையினால், மீண்டும் 10.25 மணிக்கு ரயில் பதுளை நோக்கி பயணிக்க ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

## சட்டமூலம்...

களித்துள்ளனர்.

அதேவேளை, விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்ட மூலம் தொடர்பில் சப்ரகமுவ மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் 20 உறுப்பினர்கள் எதிராகவும் 13 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்துள்ளனர்.

இரு மாகாண சபைகளில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் எதிராக வாக்களித்துள்ளனர்.

இதேவேளை, விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் கடந்த வாரம் வடமத்திய மாகாண சபையில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 10 வாக்குகளும் எதிராக 19 வாக்குகளும் கிடைத்துள்ளன.

ஊவா மாகாண சபையில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 9 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் கிடைத்தன.

அதேவேளை, வடமாகாண சபை குறித்த சட்ட மூலத்தை ஏகமனதாக நிராகரித்திருந்ததுடன் கிழக்கு மாகாண சபையில் எதிர்வரும் 30ஆம் திகதி வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை விசேட அபிவிருத்திகள் தொடர்பான சட்டம் மூலம் தொடர்பில் மாகாண முதலமைச்சர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போது அபிவிருத்திக்கான விசேட சட்டமூலத்தின் மூலம் மாகாண சபைக்கு உட்பட்ட விடயங்களை மத்திய அரசாங்கத்திற்குள் உள்வாங்கப்படமாட்டாது என்றும் பிரதமர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## வருட இறுதி அமர்வு...

ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இதன்படி வடக்கு மாகாண சபையின் முதலாவது கன்னி அமர்வு கடந்த 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதி நடைபெற்றது. மூன்று வருடங்களை பூர்த்தி செய்துள்ள வடக்கு மாகாண சபை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் நான்காம் வருடத்திற்குள் கால் பதிக்கின்றது. இன்றைய தினம் நடைபெறவுள்ள அமர்வு உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் என சகல தரப்பினருக்கும், நன்றி தெரிவிக்கும் அமர்வாக இடம்பெறவுள்ளது. இதில் மூன்று பிரேரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)

## சொத்து விபரம்...

கம் எனப்படும் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து பற்றிய விபரங்களை இன்னும் சமர்ப்பிக்கவில்லை என சமீபத்தில் குறிப்பிட்டமை தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரோஹன ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

பொது மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நிதி ரீதியாக அவர்கள் பலம் வாய்ந்தவர்களாக இருக்கின்றனரா இல்லையா என்பதை அறிவதுடன் அவர்கள் உத்தியோகப்பூர்வமாக வழங்கப்பட்ட அதிகாரங்களை துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்குகின்றனரா என்பதை உறுதிப்படுத்தவே அரசியல் கட்சிகளின் நிர்வாகிகளிடமிருந்து சொத்து மற்றும் பொறுப்பு உறுதிப்படுத்தல் பத்திரம் கோரப்படுகின்றது.

சகல மக்கள் பிரதிநிதிகளும் தமது சொத்துக்களை வருடாந்தம் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து விபரங்களை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளரிடமும் சமர்ப்பிக்க வேண்டும் இதனை செய்யத் தவறும் பட்சத்தில் சொத்து விபரங்களை சமர்ப்பிக்கா எம்.பிக்கள் தொடர்பில் முறைப்பாடுகள் பதியப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (செ-11)


பணிநிலை வேண்டுகை
கிளிநொச்சியில் இயங்கும் கணனி நிலையம் ஒன்றுக்கு கீழ்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
அலுவலக உதவியாளர் (Office Assistant)
கல்வித் தகைமை : G.C.E. O/L வேதனம்: 7000 ரூபா
நேர்முகத்தேர்வு : 31.12.2016 சனி மாலை 4.00 மணி (6374)
கல்விப் பண்பாட்டு அபிவிருத்தி மன்றம் கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி
மேலதிக விபரங்களுக்கு: 0772249513

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அன்னா & கோ (C-7014)
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

BEACON
வெலிங்டன் சந்தி, யாழ் நகர்
A/L 2019
கலை, வர்த்தக, கணித விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவு
ஆரம்பம்:-07.01.2017
காலை 9 மணி
(C-7030)

V2 TRAVELS
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK, கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ்) விண்ணப்ப படிவம் (Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.
(C-6845)
தொடர்புகளுக்கு: 0768226236
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

A/L 2017, 2018
வர்த்தகப் பிரிவு
PAPER CLASS
ஆரம்பம் 01.01.2017
காலை 10 மணி
பொருளியல் - K.பிரதீபன்
கணக்கீடு - R.சுகிர்தன்
வணிகக்கல்வி - K.மதீசன்
BEACON வெலிங்டன் சந்தி, யாழ்நகர்
(C-7029)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ் நகர் (புகையிரத கடவை அருகில்)
A/L 2019
வர்த்தகப்பிரிவு
பொருளியல் R.தர்ஷன்
கணக்கீடு A.P.பகீரதன்
வணிகக்கல்வி S.யசோதரன்
ICT R.நஜன்
ஆரம்பம் ஜனவரி 01 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 9 மணி
குறிப்பு - ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்
(C-7010)

KINGS ELECTRONICS (PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
X-mas விசேட விலைக் கழிவு 10-35% OFF





அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்
LED TV'S
Samsung 32" -31900
Hisence 32" -24900
Sony 40" -59999
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -31500
3 YEARS WARRANTY
SAMSUNG R19 REFRIGERATOR 34900/= TEN YEARS WARRANTY
Sony 5.1 Home Theater RS 20,900/= ONE YEAR WARRANTY
INNOVEX WASHING MACHINE FIVE YEARS WARRANTY 34500/=
Furnitures Toys Electronics Baby Care 10% OFF
OPEN 08.00AM TO 08.00PM 365 DAYS
www.mykings.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express No.401 Clock tower road, Jaffna. (பெருமாள் கோவில் அருகாமை)
(C-7023)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ் நகர் (புகையிரத கடவை அருகில்)
A/L 2019
ஜனவரி 01 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
குறிப்பு:- ● ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்
● தனித்துவமான ஆசிரியர் குழுவின் அர்பணிப்பான வழிகாட்டல்
(C-7008)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்
இன்று மணிவிழாக்காணும் சமூக சேவையாளர்
கலாநிதி
நா.தனேந்திரன் J.P
அவர்களின் மணிவிழாச்சிறப்புறவும்
அவரின் சேவை தொடர்ந்து எம்
சமூகத்திற்குக் கிடைக்கவும் மணிவிழா
நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வலம்புரி நண்பர்கள்




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.